பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 02 செவ்வாய்க்கிழமை (15.04.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 117

## புலிகளுக்கு அழைப்பு இல்லை

# இலங்கைக்கு உதவும் மாநாடு அமெரிக்காவில் நேற்று ஆரம்பம்

## உலகப் பிரதிநிதிகள் பங்கேற்பு

(வாஷிங்டன்)

**சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாடு நேற்றிரவு அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் உள்ள இராஜாங்கதிணைக்களத்தில் அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சாட் ஆமிர்டேஜ், பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரது இணைத் தலைமையில் ஆரம்பமாகியுள்ளது.**

29 சர்வதேச நாடுகளின் நிதிய மைச்சர்கள்,பிரதி அமைச்சர்கள் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி உலக வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் முகவர்கள் உட்பட பல உயர் அதிகாரிகள் இம் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடும் கண்டனத்திற்குள்ளான நிலையில் நேற்று ஆரம்பமாகியுள்ள இம் மாநாட்டில் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்த,மத்திய வங்கியின் ஆளுநர் எ.எச்.ஜெயவர்த்தன உட்பட பல உயர் அதிகாரிகள் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இம்மாநாட்டில் இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான நிதி மதிப்பீடு விரிவாக ஆராயப்பட்டு ஜூன் மாதம் டோக்கியோவில் நடை பெற வுள்ளஇலங்கைக்கான நிதி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சமர்

(10ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி எம்.பிக்களுடன் புலிகள் 17ம் திகதி சந்திப்பு

### ஆனந்தசங்கரிக்கும் அழைப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்பு நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் முற்பகல் 10மணியளவில் இடம்பெறும் இச் சந்திப்பில் அரசியல் துறைப்பொறுப்பாளர்.சு.ப. தமிழ்ச்செல்வன் கலந்து கொள்வார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கும் இச் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இச் சந்திப்பு இடம் பெறுவதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஆரையம்பதியில் நள்ளிரவு வேளை கைக்குண்டு வீச்சு-துப்பாக்கிச் சூடு

### வரதன் குழு உறுப்பினர் உட்பட இருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்ற கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் வரதன் குழு உறுப்பினர் ஒருவரும் பொது மகன் ஒருவரும் பலியாகினர்.

இச்சம்பவத்தில் 3பெண்கள் உட்பட 8பேர் காயடைந்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, ஆரையம்பதியில் வரதன் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் நேற்று முன்தினம் மாலை 6.30மணியளவில் வீட்டின் முன்னால் நின்ற இளம் யுவதி ஒருவர் மீது பட்டாசு கொளுத்தி வீசியுள்ளனர்.

இதனையடுத்து அந்த வீட்டில் இருந்த கணேசன் என்பவருக்கும் வரதன் குழு உறுப்பினர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன் அது பின்னர் கைகலப்பாகவும்மாறியது.

இக்கைகலப்பு சம்பவத்தை அடுதது நள்ளிரவு 11.30மணியளவில் மீண்டும் வந்த வரதன் குழு உறுப்பினர்கள் குறித்தவீட்டின் மீது கைக்குண்டை வீசி தாக்குதலை மேற்கொண்டனர்.

இச் தாக்குதல் சம்பவத்தில் யுவதியின் மைத்துனரும் 3பிள்ளைகளின் தந்தையுமான அழகுதுரை கணேசன் (வயது 30) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

இச் சம்பவத்தை அடுத்து அதற்குப் பழிவாங்கும் நோக்கில் குறித்த வீட்டில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வரதன் குழு உறுப்பினரான வினோ

(10ம் பக்கம் பார்க்க)

யுனிசெவ் ஆதரவுடன் கிளிநொச்சியில் நடந்த சிறுவர் நலன் தொடர்பான பயிற்சிப் பட்டறை நிகழ்வின் போது கலந்து கொண்ட பிரதிநிதிகள்.



# ஈராக்குக்கு அடுத்தது சிரியா தாக்குதலுக்கு அமெ.தயார்

(வெளிநாட்டு செய்திச் சேவை)

ஈராக்கை கைப்பற்றிய அமெரிக்கக் கூட்டணிப்படையினர் சிரியா மீது எந்த நேரத்திலும் தாக்குதல்களை ஆரம்பிக்லாம் என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் சூசகமாக தெரிவித்துள்ளனர்.

23 நாட்களாக ஈராக்மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின் அமெரிக்க கூட்டணிப்படையினர் வசம் ஈராக் விழுந்த போது அமெரிக்காவின் சந்தேகத்திற்கு ஆளான ஈராக்கியத் தலைவர்கள் சிரியாவுக்குத் தப்பியோடி அங்கு தஞ்சம் புகுந்திருக்கலாம் என்ற செய்திகளாலும் ஈராக் மீதான அமெரிக்க கூட்டணிப் படையினான் படை எடுப்பை சிரியா வன்மையாக கண்டித்ததாலும் சிரியா மீது அமெரிக்கா எந்த நேரமும் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடிய இரசாயன ஆயுதங்களை வைத்திருப்பதாகக் கூறி அதன் மீது போர் தொடுத்தது போல் சிரியாவிடமும இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகவும் இவ்விடயத்தில் சிரியா வாஷிங்டனுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹொலின் பவல் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை அமெரிக்காவின் இக் குற்றச்சாட்டுக்களை சிரியா மறுத்துள்ளதுடன் ஏற்கனவே ஈராக்குடனான தனது பழைய பகைமையையும் சிரியா சுட்டிக் காட்டியுள்ளதுடன் வாஷிங்டனுடன் சிரியா நல்லுறவைப் பேணவே விரும்புகின்றது என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை சதாம்ஹுசைனின் உடன் பிறவாத சகோதரரான வட்பான் இப்பிராகிம் அமெரிக்கக் கூட்டணிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், தேடப்பட்டு வரும் 55 ஈராக்கிய தலைவர்களுள் இவரும் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சதாம் ஹுசனின் சொந்த இடமான ,சிற்றிக் நகரம் அமெரிக்க கூட்டணிப் படையினரிடம் நேற்று வீழ்ச்சி அடைந்ததை அடுத்து சதாம் ஹுசைன் சிரியாவுக்குள் தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்ற நிலையிலேயே சிரியா மீதுஅமெரிக்காவின் கவனம் திரும்பியுள்ளது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழீழ எழுச்சிப் பாடல்களைப் பாடுவதால் ஏற்படும் அரசியல் பிரச்சினைகளுக்கு நான் அஞ்சவில்லை

## தென்னிந்திய பிரபல பின்னணிப் பாடகி ரி.கே.கலா

(யாழ்ப்பாணம்)

தூய தமிழ் பேசுகின்றவர்களை நான் யாழ்ப் பாணத்தில்தான் கண்டேன். அவர்களின் சுத்தமான தமிழ் உச்சரிப்பும், பண்பாடும், வரவேற்பும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.

யாழ்ப்பாணம் வந்துள்ள தென்னிந்தியாவின் பிரபல பின்னணிப் பாடகி ரி.கே.கலா நேற்று யாழ்.உல்லாச விடுதியில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

ரி.கே.கலா பத்திரிகையாளர் மத்தியில் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

தென்னிந்திய தமிழ்த் திரையுலகில் உள்ள ஒரேயொரு தமிழ்ப் பின்னணிப் பாடகி என்ற வகையில் எனக்குச் சிறப்புண்டு.

இதுவரை தமிழ், ஹிந்தி, கன்னடம் ஆகிய மொழிப் படங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளேன்.

இருப்பினும், தமிழில் பாடுவது போன்ற இன்பத்தை வேறெந்த மொழிகளிலும் என்னால் உணரமுடியவில்லை.

இந்தியாவில் தமிழ் அருகிப் போவதையிட்டு என்னால் கவலை கொள்ளாதிருக்க முடிய வில்லை. இந்த நிலைக்கு சினிமாப் படங்களை காரணமாகக் கூறுவதில் எந்தத் தவறும் இல்லை என்றேதான் கருதுகிறேன்.

(10ம் பக்கம் பார்க்க)

# அதிகாரப் பகிர்வே அரசியல் தீர்வில் அடிப்படை அம்சம்

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எடுத்துரைப்பு

(கொழும்பு)

தென்னாபிரிக்காவின், இனக் கிலேசம் என்ற நிலையில் இருந்து ஜன நாயகம் என்ற நிலைக்கு மாறியவழி முறைகளையும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் மேற் கொள்ளப் படும் பொருத்தமான அனுபவங்களை யும் இலங்கை பின் பற்ற முடியும்.

இவ்வாறு அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ''இனப்பிரச் சினையும் தேசிய ஒற்றுமையும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துரை வழங்கிய ஜி.எல்.பீரிஸ், இனப்பிரச் சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டிய அவசியத்தை பெரும்பாலான மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

இந்த அரசியல் தீர்வில் அதிகாரப் பகிர்வு என்பது அடிப்படை அம்சமாகும்.

இத்தகைய சூழ்நிலையில் சமாதான நடவடிக்கைகள் தொடர் பாக மக்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் கருத்துக்களையும், பிரேரணை களையும் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

இந்தவகையில் பொது மக்கள் மத்தியில் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக நல் அபிப்பிராயங்களை உண்டாக்கும் பொறுப்பு கல்விச் சமூகத்தின ருக்கே உரித்தானது எனவும் சுட்டிக் காட்டினார்.

மேலும் கூறுகையில், பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினாலும்,

(10ம் பக்கம் பாக்க)

## சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)

எழுதுமட்டுவாழ் ஒட்டு வெளிப் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பிரஸ்தாப இராணுவச் சிப்பாய் கடமையில் இருந்தபோது தன்னைத் தானே தலையில் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

(த)

# லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

## 300க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் தேக்கம்

(கொழும்பு)

லஞ்ச, ஊழல் ஆணைக் குழு வின் செற்பாடுகள் சட்டமா அதிபரின் உத்தரவின் பெயரில் நிறுத்தி வைக் கப்பட்டுள்ளன. இதனால் விசாரணையிலுள்ள 300க்கும் அதிகமான ஏற்பாடுகளும் ஏற் கனவே மஜிஸ்ரேட் நீதி மன்றங் களுக்கு அனுப்பிவைக்கப் பட்டமையு மான நூற்றுக்கு மதிகமான குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணை களும் கிடப்பில் போடப் பட்டுள்ளன.

மூன்று ஆணையாளர்களில் ரீ.என். அபயவீர பெப்ரவரி மாதம் கால மாகிவிட்டதை அடுத்தே ஆணைக் குழுவின் செயற் பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஆணைக் குழுவின் புலன் விசாரணைகளை நடத்துவதற்கு 90 பொலிஸ் அதிகாரிகள் நிரந்தரமாக இணைக் கப்பட்டுள்ளனர்.

347 புதிய முறைப் பாடுகள் விசாரணையை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றபோதும் எந்தவொரு முறைப்பாடு தொடர்பாகவும் சந்தேக நபர் கைது செய் யப்படுவதோ, இடங்கள் சோதனை யிடப்படுவதோ, சட்டமா அதிபரின் உத்தரவினால் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆணைக் குழு மீள அமைக் கப்படும் வரை இந்த நிலை தொடரு மென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசியலமைப்பு சபையே வெற்றிடத்தை நிரப்ப அதிகாரம் பெற்றுள்ளதுடன், ஓய்வுபெற்ற மேல்முறையீட்டு நீதிய ரசர் உபாலி டீ. குணவர்த்தன வின் பெயர் சிபார்சு செய்யப்பட்டுள் ளது. குறித்தநபர் இப்பதவியை வகிப்பதற்கு பொருத்தமற்ற வரென 30 வரையிலான ஆட்சேப மனுக்கள் அனுப்பிவைக்கப்பட்டதை தொடர்ந்து அவரது நியமனம் உறுதிசெய்யப் படவில்லை. (உ)

## புற்றுநோய் வைத்தியசாலைக் கிராம

# திட்டவரைவு ரோக்கியோ மாநாட்டில் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜுன் மாதம் ரோக்கி யோவில் நடைபெற உள்ள இலங் கைக்கு உதவி வழங்கும் மகா நாட்டில், யாழ்குடாநாட்டில் புற்று நோய் வைத்தியசாலைக் கிராமம் அமைப்பது தொடர்பான திட்ட வரைபு சமர்ப்பிக்கப்படவுள்ளது. வெள்ளி யன்று இடம்பெற்ற புற்று நோய்ச் சிகிச்சை கிராமம் அமைப்பது தொடர் பான ஆலோசனைக் கூட்டத்தில் தென் இலங்கையைச் சேர்ந்த வைத்திய நிபுணர் திருமதி சுசில் பெரேரா கருத்துத் தெரிவிக்கை யில், யாழ் போதனா வைத்திய சாலைக்கு அருகில் இவ் வைத்திய சாலையை அமைத்தால் இலகுவாக இருக்கும் என்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்.

இதற்கமைய இடத்தைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட இழுபறியால் இத்தொடர்பான ஆய்வுகளை மேற் கொள்ள 15பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவை அமைவிடம் தொடர் பான திட்ட வரைபை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டம் தொடர் பான கருத்துக்களை கோவில் வீதி யில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங் களின் இணையத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. (உ-7)

## படை அதிகாரிகள் கொழும்பு வந்தனர்

(கொழும்பு)

பாகிஸ்தான் உயர் இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

மேஜர் ஜெனரல் முகமட் சித்திக் தலைமையில் இலங்கை வந்துள்ள இக்குழுவில் இரண்டு பிரிகேடியர்கள் நான்கு லெப்டினன் கேணல்கள் உட்பட 14பேர் அங்கம் வகிக்கின்றனர்.

பாகிஸ்தான் தேசியப் பாது காப்பு கல்லூரியை சேர்ந்த உயர்மட்ட இராணுவ அதிகாரி களைக் கொண்ட இக்குழுவினர் பாதுகாப்பு அமைச்சர், பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மற்றும் முப்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

(வ)

## டோக்கியோ மாநாட்டில்

# வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு 160 கோடி டொலர் பெறமுடியும்

(கொழும்பு)

ஜப்பான் தலை நகர் டோக்கியோவில் ஜீன் மாதம் நடை பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் வடக்கு-கிழக்கு புனரமைப்புக் கென 160 கோடி டொலர் உதவி கோரப்படவிருப்பதாக மத்திய வங்கி ஆளுநரான ஏச் ஜெயவர் த்தனா தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் 300 கோடிடொலர் பெறுமதி யான உதவியை பெறவிருப்புவதாகவும், அதில் 160 கோடி வடக்கு-கிழக்கு புனரமைப் புக்கும் 140 கோடி டொலர் ஏனைய பிரதேச அபிவிருத் திக்கும் செல விடத் திட்டமிடப் பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

யப்பான் மாநாட்டில் கிடைக் கப் பெறும் நிதியை நாட்டின் பொருளாதார அபிவிருத் திக்கு முதலீடு செய்யும்பட்சத்தில் வருடத்திற்கு 8 வீத பொருளாதார அபிவிருத்தியை எட்டக் கூடியதாக இருக்குமெனவும், இதனால் நாடு மூன்றாண்டுகளின் பின் பொருளா தார ஸ்திரத் தன்மை பெறும் என வும் அவர் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார். (க-08)

## வன்னி எம்.பி.மீது தாக்குதல்

# சம்பந்தப்பட்டோரை கைது செய்ய பொலிஸ் அதிகாரி பணிப்பு

(புத்தளம்)

கடந்த வியாழக்கிழமை புத்தளத்தில் இடம்பெற்ற இடம் பெயர் சேவையின் போது வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் ரிகாத் பதியுதீனையும், அவரது ஆதரவாளர்களையும், தாக்கியது தொடர்பில் புத்தளம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை யடுத்து சம்பந்தப் பட்ட குழுவை கைது செய்வதற்கான பணிப்பை சிலாபம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ரண சிங்க வழங்கியுள்ளார்.

இக் குழுக்களை கைது செய்ய 10 பேரங்கிய இரு விசேட பொலிஸ் குழு கடந்த சனிக்கிழமை புத்தளத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

நாகவில்லு, சிலாபம், கல்பிட்டி பகுதிகளுக்குச் சென்று இச் சந்தேக நபர்களை தேடும் பணியினை இப்பொலிஸ் குழுவினர் மேற் கொண்டுள்ளனர்.

இதேவேளை இந்த ஆயுதக் குழுவினர் தற்போது தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள தாகவும், அவர்களை கைது செய்ய சகல பொலிஸ் பிரிவுகளுக்கும் அறிவிக் கப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ-க)

## குண்டுவெடிப்புச் சம்பவத்தில் நான்கு சிப்பாய்கள் காயம்

(கொழும்பு)

அச்சுவேலி தோலகட்டி பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் நான்கு இரா ணுவச் சிப்பாய்கள் காயமடைந் தனர்.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் காயம டைந்தசிப்பாய்கள் அனைவரும் பலாலி இராணுவ வைத்தி யசாலையில அனுமதிக் கப்ப ட்டுள்ளனர்

இதேவேளை கடந்த சனிக்கிழமை பலாலி இராணுவ முகாமில் இடம்பெற்ற தவறு தலான கைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சார்ஜன்தரத்தைச் சேர்ந்தஇருவர் காயமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.(க)

# புலிகள் பிரதிநிதிகள் -படைத்தரப்பு மட்டக்களப்பில் சந்திப்பர்

மட்டக்களப்பு மாவட்டதில் தமிழீழ விடுதலைப்புலி களுக்கும் ஸ்ரீலங்காவின் படைத்துறை அமைச்சின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதி சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புத் தலைவர் தலைமையில் நடைபெற வுள்ளது.

இதேவேளை அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்து ஆராய்ப்படும் கூட்டம் ஒன்று எதிர்வரும் 20ஆம்திகதி மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்திலும் மறுநாள் திரு கோண மலை மாவட்டத்திலும் நடைபெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-10)

# முஸ்லிம் - புலிகள் தரப்பு சந்திப்பு இம்மாதம் 29 இல்

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் முஸ்லிம் விவ காரங்களை கையாள்வதற்கான உப குழுவின் இரண்டாவது கூட்டம் இம்மாதம் 29ஆம் திகதி மட்டக்களப்பு சூனியப் பிரதேசத் திலுள்ள வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டச்சிறப்புத் தளபதி ரமேஷ், அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் அடங்கிய குழுவும் முஸ்லிம்கள் தரப்பில் வீடமைப்பு பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தலை மையிலான குழுவும் கலந்து கொள்ளவுள்ளது.

முஸ்லிம் விவகாரங்களை கையாள்வதற்கான முதலாவது உப கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானத்து க்கு அமைய வாகனேரி, பெண்டுகள்சேனை, கரடியனாறு. ஆகிய. இடங் களில் உள்ள முஸ்லிம் விவசாயி களின் விவசாயக் காணிகள் மீண்டும் அவர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளமை தெரிந்ததே (உ-8)

# ஒளித்து வைக்கப்பட்டுள்ள பேரழிவு ஆயுதங்களைக் கண்டு பிடிப்போம்

## அமெரிக்க ராஜாங்க அமைச்சர் உறுதி

(லண்டன்)

ஈராக்கில் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதம் இருப்பதை கண்டுபிடித்து எடுப்போம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் தெரிவித்து உள்ளார்.

ஈராக்கில் பயங்கர நாச விளைவை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவைகளை கண்டு பிடித்து எடுத்து அழிக்கத்தான் போர் தொடுத்துள்ளோம் என்றும் அமெரிக்கா கூறியது. போர் தொடங்கி ஏறக்குறைய 25 நாட்களுக்குள் ஈராக்கை அமெரிக்க கூட்டுப்படைகள் பிடித்து விட்டன. பல இடங்களில் சோதனையும் நடத்தி உள்ளன. ஆனால் இது வரை இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஈராக்கில் கடும் சண்டையிடும் காலம் முடிந்து விட்டது. இனிமேல் எங்களுடைய கவனம் எல்லாம் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இரசாயன ஆயுதங்களை கண்டு பிடித்து எடுப்போம். ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் பதுக்கி வைத்திருப்பதற்கான சரியான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன. இதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடம் வேண்டாம் என்று பி.பி.ஸி க்கு பேட்டி அளித்த கொலின் பவல் கூறினார்.

ஈராக் மீது போர் தொடுத்தால் அங்கு ஜனநாயகம் மலர்ந்துள்ளது. இதுவே மிகப்பெரிய வெற்றியாகும். சதாமை கைது செய்வதிலோ அல்லது அவரை கொல்வதிலோ உண்மையான வெற்றி இல்லை என்று கொலின் பவல் கூறினார்.

ஈராக்கில் புதிய அரசு அமையும். அந்த அரசை அந்த நாட்டு மக்களே முடிவு செய்து அமைப்பார்கள். அப்போது போர் வெற்றிகரமாக முடிவுக்கு வரும். மேலும் ஈராக்கில் எந்தவித இரசாயன ஆயுதமும் இருக்காது. சதாம் ஹுசைனை எங்கள் படை நெருங்கி விட்டதோ இல்லையோ ஆனால் சதாமுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிய நாங்கள் விரும்புகிறோம். அவர் தற்போது எதற்கும் பொறுப்பு வகிக்கவில்லை என்று கொலின் பவல் கூறினார்.

### சதாமின் சொத்துகள் எங்கே?

ஈராக் போர் ஓய்ந்திருக்கும் பின்னணியில் சதாம் ஹுசைன் மறைத்து வைத்திருக்கும் 78 ஆயிரம் கோடியை தேடும் வேட்டை முடுக்கி விடப்பட்டுள்ளது.

சதாமின் கோடிக் கணக்கான சொத்துக்கள் மீது இப்போது பார்வை திரும்பியிருக்கிறது. கிட்டத்தட்ட 78 ஆயிரம் கோடி சொத்து சேர்த்து வைத்திருக்கும் சதாம் ஹுசைன் அதனை இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பதுக்கி வைத்திருப்பதாக தெரிகிறது.

இப்போது பதுக்கி வைத்திருக்கும் அந்தசொத்துக்களை வேட்டையாட இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர் உத்தரவிட்டிருக்கிறார்.

### சதாமைத் தேடி வீடு வீடாக வேட்டை

சதாமைத் தேடி பக்தாத்தில் கூட்டணிப்படைகள் வீடு வீடாகச் சோதனை நடத்தி வருகின்றன. சரணடைந்த ஆதரவாளர்களிடம் அமெரிக்கப் படைகள் துருவித் துருவி விசாரணை நடத்தி வருகின்றன.

தலைநகர் வீழ்ந்ததையடுத்து பக்தாத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு விட்டது. மக்கள் வீடுகளுக்குள்ளும் கடைகள், அலுவலகங்கள், அரண்மனைகளுக்குள் புகுந்து கொள்ளையடித்து வருகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த அமெரிக்கா 1000 பொலிஸாரை அங்கு அனுப்பியிருக்கிறது. இந்த நிலையில் சதாம் குண்டு வீச்சில் இறந்து விட்டார் என்று அமெரிக்கா கூறிவந்தாலும் அது பற்றிய உறுதியான தகவல்கள் இல்லை. சதாமின் சொந்த ஊரான திக்ரித்திலும் சோதனை நடைபெறுகிறது.

### முன்னாள் அமைச்சர் கைது

ஈராக்கிய முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் இன்னொரு ஒன்று விட்ட சகோதரரும் முன்னாள் உள்துறைஅமைச்சருமான இப்ராஹிம் அல்குயிக்கி என்பவர் அமெரிக்கப்படைகளால் பிடிக்கபட்டதாகவும் இராணுவ ஹெலிகொப்ரர் ஒன்றில் விசாரணைக்காக இரகசியாமான ஓர் இடத்துக்கு கொண்டு போகப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்கர்களால் மிகவும் அவசியமாகத் தேடப்பட்ட ஒருவர் இவர் என்று கூறப்படுகின்றது. (பி)

# சார்ஸ் நோய் விஷக்கிருமி

## மரபணு கண்டு பிடிப்பு

(வான்கூவர்)

கனடா நாட்டில் வான்கூவர் நகரில் விஞ்ஞானிகள் கடும் மூச்சுத் திணறல் நோய்க்கு(சார்ஸ்) காரணமான விஷக்கிருமியின் மரபணுவைக் கண்டு பிடித்துள்ளனர்.

நோயாளிகளுக்கு சார்ஸ் நோய் தான் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிவதற்கு இந்த கண்டு பிடிப்பு மிகவும் உதவியாக அமையும். மேலும் சார்ஸ்க்கு மருந்து கண்டுபிடிக்கும் ஆய்வுகளுக்கு பயனுள்ளது இந்த கண்டுபிடிப்பு என்றும் விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இதுவரை நோயாளிகளிடம் காணப்படும் அறிகுறிகளை மட்டுமே கொண்டு சார்ஸ் பாதித்திருக்கலாம் என்ற அடிப்படையில் தான் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (பி)

## மலேசிய நிருபர்கள் கடத்தப்பட்டு விடுதலை

(கோலாலம்பூர்)

மலேசியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் மூவர் பக்தாத்தில் துப்பாக்கி ஏந்திய சிலரால் கடத்தப்பட்டனர். பின்னர் அவர்கள் பத்திரமாக விடுவிக்கப்பட்டனர்.

அவர்களுடன் சென்ற ஈராக்கைச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளரை கடத்தல்காரர்கள் சுட்டுக் கொன்றனர்.

மலேசியாவைச் சேர்ந்த 2 டாக்டர்களை அடித்து காயப்படுத்தினர்.

பக்தாத் நகரில் ஷெட்டான் ஹோட்டலில் இருந்து ஒரு மருத்துவ மனைக்கு மலேசிய பத்திரிகையாளர்கள் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களை சிலர் கடத்திச் சென்றனர். (பி)



சென்னை மெரினா கடற்கரையோரம் பச்சைப் பசேலென்று பூத்துக்குலுங்கிய மரம், கோடை வெயிலின் கொடுமையால் கருகி மொட்டையாக் காட்சி தருகிறது.

# ஐரோப். ஒன்றியத் தலைவர்கள் இன்று எதென்ஸில் கூடுகிறார்கள்

(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் உச்சிமாநாடு இன்றும் நாளையும் எதென்ஸில் நடைபெறவுள்ளது.

ஈராக் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்களும் பிளவுபட்டுள்ளதால், ஐரோப்பியக் கண்டத்தின் எதிர்காலம், ஜனநாயகம் குறித்து இந்த உச்சி மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளின் தலைவர்கள் இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஈராக் யுத்தம் ஆரம்பித்த பின்னர் இடம்பெறும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் கலந்து கொள்ளும் முதலாவது உச்சி மாநாடு இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உச்சி மாநாட்டில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனானும் கலந்து கொள்ளவுள்ளார். (பி-2)

# எதிர்ப்புகள் கட்டுப்படும் வரை போர் நடவடிக்கை தொடரும்

(வாஷிங்டன்)

ஈராக்கின் ஒரு சில இடங்களில் அமெரிக்கப் படையினருக்கு எதிராக இடம்பெறும் எதிர்ப்பு நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வரை ஈராக் யுத்தம் தொடரும் என்று அமெரிக்க ஜெனரல் ரொமி பிராங்ஸ் கூறியுள்ளார்.

ஈராக்கிய பாரா இராணுவத்தினது தற்கொலைப்படைப் பிரிவான சதாஹிம் சதாம் என்ற படைப்பிரிவு மட்டுமன்றி ஒரு சில வெளிநாட்டவர்களும் இறுதி வரை அமெரிக்கப் படையினரை எதிர்த்து போராட இருப்பதாக இப்படைப்பிரிவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான எதிர்ப்புகள் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும் வரை யுத்தம் தொடரும் என்று பிராங்ஸ் கூறியுள்ளார்.

ஈராக் யுத்தத்திற்குப் பொறுப்பான தளபதியாக ஜெனரல் ரொமி பிராங்ஸ் கடமையாற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-2)



ஈராக்கில் உள்ள ஒரு மாளிகையின் கூரையின் மீது அமைக்கப்பட்டிருந்த சதாமின் சிலைக்கு தீ மூட்டப்பட்டுள்ளது.

## கடுமையான குண்டு வீச்சுக்குப் பிறகும்

# சதாமின் இளைய மகனை மக்கள் பார்த்திருக்கிறார்கள்

(பக்தாத்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அவரது மகன்கள் குவாசே, உதாய் தங்கி இருந்த ஒரு கட்டடத்தின் மீது அமெரிக்க போர் விமானங்கள் சரமாரியாக குண்டு வீசி தாக்குதல் நடத்திய பிறகும் சதாமின் இளைய மகன் குவாசேயே நாங்கள் உயிருடன் பார்த்தோம் என்று பக்தாத் மக்கள் தெரிவித்து உள்ளனர்.

ஈராக்கில் மன்சூர் மாவட்டத்தில் உள்ள ஒரு மாளிகையில் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அவரது மகன்கள் குவாசே, உதாய் ஆகியோர் ஆலோசனை நடத்தி வருகிறார்கள் என்று அமெரிக்க உளவு ஸ்தாபனமான சிஐஏக்கு ஒரு ரகசியத் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து சதாமும் அவரது மகன்களும் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்த கட்டடம் மீது அமெரிக்க போர் விமானங்கள் கடந்த திங்கட்கிழமை சரமாரியாக குண்டு வீசி தாக்கின.

ஏறக்குறைய 900 கிலோ எடையுள்ள 4 குண்டுகளை இந்த கட்டடம் மீது அமெரிக்கப்போர் விமானங்கள் வீசின. இதில் இந்தக் கட்டடம் இடிந்து தரை மட்டமானது. ஆனால் அதிபர் சதாம் அவரது மகன்கள் என்ன ஆனார்கள் என்பது இதுவரை தெரியவில்லை. இந்த குண்டு வீச்சில் இருந்து சதாம் ஹுசைன் தப்பியோடி இருக்கலாம் என்று அமெரிக்கா, இங்கிலாந்து அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்தனர்.

இந்நிலையில் அமெரிக்காவின் குண்டு வீச்சில் சீர்குலைந்து போன மன்சூர் மாவட்டத்திற்கு ராய்டர் செய்தி ஸ்தாபனத்தின் நிருபர் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார். அப்போது குண்டுவீசி தகர்க்கப்பட்ட கட்டடத்தை சுற்றி உள்ள தெருக்களில் வசிக்கும் மக்களும் இளவயது கணவன், மனைவி ஆகியோர் ராய்டர் நிருபரிடம் பேசினார்கள்.

''அமெரிக்கப் போர் விமானம் குண்டு வீசி தாக்குதல் நடத்திய 15 நிமிடங்களிற்கு பிறகு சதாமின் இளைய மகன் தனது மாளிகையில் இருந்து வெளியே சென்றதை நாங்கள் பார்த்தோம். அவர் குண்டு வீச்சில் ஏற்பட்ட சேதத்தை பார்வையிடுவதற்காக அரசுக்குச் சொந்தமான காரில் கிளம்பிச் சென்றார். அவர்களது தோட்டம் தொடர்ந்து குப்பை கூழங்கள் போல் காட்சி அளிக்கிறது.

குவாசே தனது கையில் ஏ.கே.47 ரக துப்பாக்கியுடன் காரில் அமர்ந்திருப்பதை நாங்கள் பார்த்தோம். அவர் குவாசே தான் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அமெரிக்கா குண்டு வீசும் முன்பு அந்தப் பகுதி முழுவதும் சதாமின் சிறப்பு பாதுகாப்பு படையினர் நிறைந்து காணப்பட்டனர் என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள் .

அதேசமயம் தனது பெயரைத் தெரிவிக்க விரும்பாத அந்த கணவன் கூறும் போது, ''அமெரிக்கா குண்டு வீச்சு நடத்திய 15 நிமிடங்களுக்குப் பிறகு சில தெருக்களை கடந்து ஒரு இடத்தில் சதாம்ஹுசைனை பார்த்ததாக எனது உறவினர்கள் தெரிவித்தனர் என்றார்.

பாகிஸ்தான் கடற்பகுதிக்குள் அத்துமீறி பிடித்ததாக குற்றம் சாட்டி 38 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடற்படையினர் கைது செய்துள்ளனர். இந்திய மீனவர்கள் சென்ற படகுகளையும் அவர்கள் பறிமுதல் செய்தனர். பின்னர் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் அந்நாட்டு பொலிஸ் வசம் ஒப்படைக்கப்பட்டனர். இதற்கு முன்னதாக இதே குற்றச் சாட்டின் கீழ் 15 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடற்படை பிடித்து வைத்திருக்கிறது. இதோடு அந்நாட்டில் தற்போது சிறை வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்துள்ளது. இதை பாகிஸ்தான் கடற்படை அதிகாரி ஒருவர் கூறியதாக கூறி ''டான்'' என்ற செய்தி நிறுவனம் தெரிவித்தது.

கடந்த பெப்ரவரி மாதம் நல்லெண்ண அடிப்படையில் பாகிஸ்தான் சிறையில் வைக்கப்பட்டிருந்த 280 இந்திய மீனவர்களை விடுவித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (பி)



சரணடைந்த விஞ்ஞானி.



காணாமல் போனவர்களைக் கண்ட சந்தோசத்தில் உறவினர்கள் கண்டு மகிழும் காட்சி.



கைவிடப்பட்ட நிலையில் ஈராக்கிய ஆயுதங்கள் பக்தாத் மக்களுக்கு ஒரு கண்காட்சி.



சதாமின் ஆட்சி வீழ்த்தப்பட்டதை அடுத்து மகிழ்ச்சிப் பரவசத்தில் யு.எஸ் வீரர்கள்.



# அமைதியை நிலைநாட்ட கூட்டு ரோந்துப் பணி

(பக்தாத்)

பக்தாத் மற்றும் பாஸ்ரா நகரங்களில் அமைதியை நிலை நாட்டுவதற்காக ஈராக் பொலிஸாரும் அமெரிக்கக் கூட்டணிப் படைகளும் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபடவுள்ளனர் என்று ஈராக் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பக்தாத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியதும் அரச நிர்வாகம் நிலைகுலைந்தது. இதனால் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்தது.

கூட்டணிப் படையினரும் ஈராக் பொலிஸ் அதிகாரிகளும் சனிக்கிழமை பேச்சு நடத்தியதில் பக்தாத் மற்றும் பாஸ்ராவில் அமைதியை நிலைநாட்டவும் கொள்ளைச் சம்பவங்களை அறவே கட்டுப்படுத்தவும் கூட்டுரோந்துப் பணியில் ஈடுபடுவது என்று முடிவெடுத்தனர்.

ஹோட்டல் பலஸ்தீனத்தில் ஒன்றில் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் மற்றும் ஈராக் குடிநீர், மின்சாரம் மற்றும் காவல் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் ஒன்று கூடி பேசியதில் இந்த முடிவெடுக்கப்பட்டது.

ஐம்பது லட்சம் பேர் வாழும் பக்தாத்தில் அமெரிக்கப் படைகளுடன் ஈராக் பொலிஸார் கூட்டு ரோந்துப் பணி மேற்கொள்வர். அதேபோல் பாஸ்ரா நகரில் பிரிட்டிஷ் படைகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

கூட்டு ரோந்துப் பணிகள் ஓரிரு நாள்களில் துவங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஈராக் மக்களின் உடைமைகளைப் பாதுகாக்க விரைவில் பணிக்குத் திரும்ப விரும்புகிறோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். பக்தாத்தில் ஒரு வாரமாக மின் விநியோகம் இல்லை. மருத்துவமனைகளில் கூட்டம் நிரம்பி வழிகிறது. தண்ணீர் சொட்டுச் சொட்டாக வருகிறது.

இதைத் தொடர்ந்து இயல்பு நிலைக்கு திரும்ப பொலிஸாரை பணி செய்ய மீண்டும் அனுமதிக்க வேண்டும் என்று ஈராக் மக்கள் அமெரிக்கப் படைகளுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இருந்த போதிலும் சில பொலிஸார் சதாமுடன் ரகசிய தொடர்பு வைத்திருக்கலாம் என்று அமெரிக்கா அச்சம் கொண்டுள்ளது.(பி)

# பிடிபட்டவர்களில் 2 பேர் மீட்கப்பட்டனர்

(வாஷிங்டன்)

ஈராக்கில் சதாம் படையினரிடம் போர்க் கைதிகளாகப் பிடிபட்ட அமெரிக்க வீரர்கள் 7 பேரில் இருவர் மீட்கப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ரம்ஸ்பெல்டு தெரிவித்துள்ளார்.

என்பிசி தொலைக்காட்சிக்கு ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது,

டிக்ரித் அருகே போர்க் கைதிகளாகப் பிடிபட்ட 7 அமெரிக்க வீரர்களில் இருவர் மீட்கப்பட்டனர்.அவர்கள் இருவரும் லேசான குண்டுக்காயம் அடைந்துள்ளனர். மற்றவர்கள் நலமாக உள்ளனர். இது பற்றிஅவர்களின் குடும்பத்தாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார் ரம்ஸ்பெல்டு. (பி)

# சதாமின் மரபணு விபரம் அமெரிக்காவிடம் உண்டு

(வாஷிங்டன்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் டி.என்.ஏ. மரபணு விபரங்கள் அமெரிக்காவிடம் இருப்பதாகவும் அவரை கொலை செய்யும் முயற்சிகள் வெற்றியளித்தனவா என்பதை தெரிந்து கொள்ள அந்த மரபணுவை பயன்படுத்திக் கொள்ளவிருப்பதாகவும், ஈராக் யுத்தத்திற்கான அமெரிக்காவின் தளபதி ரொமி பிராங்ஸ் கூறியுள்ளார்.

சதாம் ஹுசைன் இறந்திருக்க வேண்டும் அல்லது உயிருடன் தப்பி ஓடியிருக்க வேண்டும் என்று சி.என்.என் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தாக்குதல் நடாத்தப்பட்ட இடங்களில் சதாம கொல்லப்



மீட்கப்பட்ட போர்க் கைதிகளை தொலைக் காட்சியில் உறவினர்கள் கண்டனர்.



ஈராக்கியரால் கடத்திச் செல்லப்பட்ட தன் மகனை தொலைக்காட்சியில் கண்டு தன்னை மறந்தேன் என்றார் ஜோன் நிலே.



போரில் கொல்லப்பட்டு அனாதரவாகக் கிடக்கும் சடலங்களை தன்னார்வத் தொண்டர்கள் தேடி அப்புறப்படுத்துகிறார்கள்.



ஒரு புதைக்குழிக்குமுன் பொது மக்களின் சடலங்களை வைத்து அஞ்சலி செலுத்தப்படுகிறது.



பக்தாத்தின் மத்தியில் சதாமின் மாளிகை யொன்றின் மேலாகப் பறக்கும் ஹெலிகொப்ரர்.





சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஈராக்கிய வீரர்கள்.



கைது செய்த ஈராக் படையினரை சோதனையிடும் யு.எஸ் படையினர்.

சதாம் ஹுசைன் இறந்திருக்க வேண்டும் அல்லது உயிருடன் தப்பி ஓடியிருக்க வேண்டும் என்று சி.என்.என் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தாக்குதல் நடாத்தப்பட்ட இடங்களில் சதாம கொல்லப் பட்டாரா என்பதை மரபணு சோதனை நடத்துவதன் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்று அவர் கூறியுள்ளார். (பி-2)

# ஈராக் போரில் அமெரிக்கர்களின் சாவு எண்ணிக்கை 114ஆக உயர்வு

(கோலாலம்பூர்)

ஈராக் போரில் அமெரிக்கர்களின் சாவு எண்ணிக்கை 114 ஆக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் இறந்தவர்களின் எண்ணிக்கை 107 ஆக இருந்தது. இது 114 ஆக அதிகரித் துள்ளது என்று பென்ரகன் தெரிவித்துள்ளது.

மேலும் அமெரிக்கர்கள் 399 பேர் குண்டுக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 6 பேரை காணவில்லை. 7 பேர் போர் கைதிகளாக உள்ளனர் என்று பென்ரகன் தெரிவித்துள்ளது.

ஈராக் தரப்பில் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் பலியாகி இருக்கலாம் எனத் தெரிகிறது. (பி)



பக்தாத் நகரில் ஞாயிற்றுக்கிழமை பணியில் ஈடுபட்ட அமெரிக்க மரைன் ஹெலிகொப்ரர்கள்.



ஒழுங்கை நிலைநாட்ட துருப்புகள் செயற்படத் தொடங்கியுள்ளனர்.



அடையாளம் கான முடியாவிட்டாலும் சடலங்களை அப்புறப்படுத்தி புதைக்கத் தானே வேண்டும்.



காயமடைந்த தமது சகாக்களை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் காட்சி.

## சிறுவிளம்பரம்


### தோச நிவர்த்தி

ஆண், பெண் இருவர்களுக்கும் கிரக தோஷம் இருப்பின் திருமணம், புத்திரபாக்கியம் இல்லாதோர்க்கும் வீடு வியாபார விருத்திக்கும் சரியான வியாபாரப் பெயர் அமைப்பதற்கும் 159A, கோவில் வீதி, நல்லூரில் தொடர்பு கொள்ளவும். (6633)

### இந்திய ஸ்தல யாத்திரை

28-04-2003ஆம் திகதி அளவில் ஆரம்பம். விரும்புவோர் 159A, கோவில் வீதி, நல்லூரில் தொடர்பு கொள்ளவும். T.P: 0777 110329. (6633)


# யுத்த நிறுத்தத்தைப் பாதுகாக்க பிரதான கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## இலங்கைத் தேசிய கிறிஸ்தவ மன்றம் அழைப்பு

(கொழும்பு)

யுத்தமும் வன்முறையும் ஆக்க வளத்திற்கு எதிரானவை என்பதால் யுத்த நிறுத்தத்தைப் பாதுகாக்க இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும்.

இலங்கையில் உள்ள எட்டு கிறிஸ்தவ சபைத் தலைவர்களுடன் இணைந்து இலங்கைத் தேசிய கிறிஸ்தவ மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டும் நடவடிக்கைகளில் அரசாங்கமும் எதிர்க் கட்சியும் இணைந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமா கின்றது.

இந்நிலையில் யுத்த நிறுத்தத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் அதேசமயம் அதனைப் பலமிழக்கச் செய்கின்ற நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டியதும் மிகமிக அவசியமாகின்றது.

இலங்கை வாழ் சமூகங்களுக்கிடையில் சமாதானச் செயற்பாடுகள் தொடர்பான கொள்கைகளில் அல்லது கண்ணோட்டங்களுக்கு இடையேகாணப்படும் இடைவெளியைக் குறைப்பதற்கு ஒரு கூட்டுமுயற்சியின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

சகல சமூகங்களுக்குமத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயல்முறையை வலுப்படுத்தலே காலத்தின் தேவையாகின்றது.

இவ் வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் நாட்டின் சகலபிரஜைகளும் அச்சமும் குரோதமும்இன்றி சமாதானமாகவும் கௌரவமாகவும் வாழக்கூடிய நிலை விரைவில் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

சமாதானச் சூழலைகட்சி சார்ந்த இலாபங்களுக்குப் பயன்படுத்தாது நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன்களுக்காக சமாதானத்தை முன்னெடுக்க உதவும் வகையில் பயன்படுத்துமாறு சகல கட்சிகளையும் தேசிய கிறிஸ்தவ மன்றம் கேட்டுக் கொள்கிறது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# சகல சமூகங்களும் தேசிய நலனுக்காக அன்றி சுயலாபம் கருதியே செயற்படுகின்றன

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதை விடுத்து சுயலாபம் கருதி செயற்படுவதே தற்போதைய சகல சமூகங்களினதும் நோக்கமாக இருக்கின்றது என ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சாரணர் விருது வழங்கும் விழாவிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய ஜனாதிபதி சுயலாபம் கருதிச் செயற்படும் சமூகத்தினரை மீட்டெடுக்கும் பொறுப்பு இளைய தலைமுறையினருக்கே உண்டு.

சகோதரத்துவம், அன்பு என்பவற்றுக்குப் பதிலாக வன்முறை யும் சுயநலமுமே இன்றைய சமூகத்தில் வேரூன்றியுள்ளன.

1948ஆம் ஆண்டு இந்நாடு சுதந்திரம் அடைந்தாலும், அன்று தொடக்கம் இன்றுவரை இந்நாடு ஒரு சரியான ஆட்சியின் கீழ் அமையவில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கு ஆட்சிப் பீடத்தில் இருந்தவர்களே பொறுப்பு எனவும் சுட்டிக்



காட்டினார். ஆனால் 1994ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் உக்கிரமடைந்திருந்து. இதனால் நாட்டு மக்களை இப்போரில் இருந்து உயிர் காக்கும் பொருட்டு கடந்த 6 வருடங்களாக போரில் கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருட காலமாகியும் மக்களின் மனங்களில் நிறைவு ஏற்பட்டதாக தெரியவில்லை எனவும் சுட்டிக்காட்டினார். (க-8)

# முஸ்லிம் மக்களின் நலன்களுக்கென மட்டக்களப்பில் விசேட கூட்டம்

## புலிகள் பிரமுகர்கள் கலந்து கொள்வர்

(மட்டக்களப்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் முஸ்லிம் மக்களின் விடயங்களை கையாள்வதற்கான குழுவின் கூட்டம் இம்மாதம் 29ஆம் திகதி காலை 10 மணிக்கு மட்டக்களப்பு மாவட்ட யுத்த சூனியப் பிரதேசத்தில் உள்ள வவுனதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், பிராந்திய அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் அடங்கிய குழுவினரும் முஸ்லிம்கள் தரப்பில் வீடமைப்பு பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தலைமையிலான குழுவினரும் கலந்து கொள்ள இருக்கின்றார்கள்.

முஸ்லிம் விவகாரங்களை கையாளுவதற்கான உப குழுவின் முதலாவது கூட்டத்தில் தீர்மானித்ததன் படி வாகனேரி, பெண்டுகள்சேனை, கரடியனாறு, தாண்டியடி ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட விடுதலைப் புலிகள் ஒத்தாசை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-3)



வலம்புரியின் புத்தாண்டு வாழ்த்திலும், புத்தாண்டில் மலர்ந்த கவிதைகள் பகுதியிலும் வந்த இப் படத்தினை வரைந்தவர் ஓவியர் வரதராசன்.

# சுதந்திரவர்த்தக ஒப்பந்தம் இலங்கை — எகிப்து கைச்சாத்து

(கொழும்பு)

சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றில் இலங்கையும் எகிப்தும் இவ்வருட இறுதிக்குள் கைச்சாத்திடவுள்ளன.

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டு ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. இத்தகைய வர்த்தக ஒப்பந்தமொன்றை இலங்கை செய்து கொள்ளும் முதலாவது மத்திய கிழக்கு நாடு எகிப்து என்பது குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில் எகிப்திய வர்த்தக அமைச்சர் இலங்கைக்கான விஜயமொன்றை மிக விரைவில் மேற்கொள்ளவுள்ளார்.

இதற்கிடையில் கொழும்புக்கும் எகிப்திற்குமிடையில் விமானப் போக்குவரத்து ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக எகிப்திய விமான நிலைய அதிகாரிகள் இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். (க-8)

# அரசு-புலிகள் பேச்சுவார்த்தை சகலரும் இணைக்கப்படவேண்டும்

## டாக்டர் குமார் ரூபசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முன்னேறி வருகின்றன. பேச்சுவார்த்தைகளில் ஏனைய தரப்பினரையும் இணைத்துக் கொள்ள வேண்டிய கால கட்டம் நெருங்கியுள்ளது. அரசாங்கம் தனது பேச்சுவார்த்தைக் குழுவில் எதிர்க்கட்சிப் பிரதிநிதியொருவரையும், ஜனாதிபதி பிரதிநிதியொருவரையும், இடதுசாரிக் கட்சிகள், ஜே.வி.பி. ஆகியவற்றிலிருந்து தலா ஒவ்வொரு பிரதிநிதியையும் உள்ளடக்கிக் கொள்ளுதல் வேண்டும். அதுபோலவே ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் நிதிகளையும் உள்ளடக்கிக் கொள்ளுதல் வேண்டும் என குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னாபிரிக்காவில் அரசாங்கத்துக்கும் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரசிற்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் பின்னைய கட்டங்களின் சுமார் 20 அரசியற் கட்சிகள் கலந்து கொண்டிருந்தன. இதனை நாம் முன்மாதிரியாகக் கொள்ளுதல் வேண்டும்.

எந்தவொரு பேச்சுவார்த்தையும் பரந்த மக்களை உள்ளடக்கும் விதத்தில் விரிவு படுத்தப்பட வேண்டும். பேச்சுவார்த்தைகளில் என்ன நடக்கின்றதென்பதை பொதுமக்கள் புரியும் படி செய்வதுடன் பொது மக்கள் பங்குபற்றும் வாய்ப்புக்களை அதிகரிக்கவும் வேண்டும். மக்களுக்கும் பேச்சுக்களில் ஈடுபடும் குழுக்களுக்கும் இடையே உள்ள இடைவெளி நிரப்பப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-8)

# சோதனைக் கெடுபிடி குறைந்தபாடில்லை

(கிளிநொச்சி)

முகமாலைச் சோதனைச் சாவடிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் இன்னும் குறையவில்லை என பயணிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

புதுவருட தினத்தையொட்டி பயணத்தை மேற்கொண்டு வரும் தாங்கள் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கையால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-10)

# சிறுவர் செயற்பாட்டு மதிப்பீட்டில் பிரி.பேரவைக் குழு ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறுவர் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கென பிரித்தானியப் பேரவையைச் சேர்ந்த இலங்கைக்கான சிறப்பு அலுவலர் வீரக்கொடி தலைமையிலான குழுவினர் யாழ் வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இக்குழு தங்கியிருக்கும் காலப்பகுதியில் சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ் அலுவலகத்தினருடன் கலந்துரையாடல் மேற்கொள்வதுடன் யாழ். இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி ஆகியவற்றின் சிறுவர் தொடர்பாடல் குழு அங்கத்தவர்களுடன் கலந்துரையாடல்களையும் மதிப்பீடுகளையும் மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் சிறுவர்கள் தொடர்பாடற் குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் சிறுவர்களின் எதிர்காலத்திற்கான சந்திப்புத் தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ் அலுவலகத்தில் நடைபெற உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (வ)




தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
சித்திரை தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறார்கள்
பலவருட கால அனுபவம் மிக்க
புலவர் வீடியோ ஸ்தாபனத்தார்



யாழ்நகரில் எங்குமில்லாத DVC PRO HD கமரா மூலம் உங்கள்
மங்கள வைபவங்கள், கலை நிகழ்ச்சிகளை சிறந்த முறையில்
உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடியோ படம் பிடித்திடவும்
VCD DVD வீடியோ பிரதிகளை பதிவு செய்திடவும்
அன்றும் இன்றும் என்றும்
உங்களின்!...

புலவர் வீடியோ
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
T.P: 070 -212973
077 -6002626

(C/6025)

# சுபானு வருடம்

* சனி,குரு,ராகு,கேது மாற்றங்கள்

வாக்கிய பஞ்சாங்கப்படி 22.5.2003 இல சனி இடப ராசியில் இருந்து மிதுனத்திற்கு இடம்பெயர்ந்து மிதுனராசியில் இரண்டரை வருடங்கள் வரை சஞ்சரிக்கும். 23.07 2003 இல வியாழன் கற்கடக ராசியில் இருநது சிங்க ராசிக்கு இடம்பெயர்ந்து ஒரு வருடத்துக்கு சிங்க ராசியில் சஞ்சாரம் செய்யும. 14.08.2003 இல ராகு, கேதுக்கள் இடப விருச்சிக ராசிகளில் இருந்து முறையே மேட ,துலாராசிகளுக்கு மாற்றம் அடைந்து ஒன்றரை வருடம் வரை சஞ்சரிக்கும். இலங்கையில் இக்கிரகங்களின் மாற்றங்களால் பொருளாதார, இராணுவ ,அரசியல், சமூகமாற்றங்கள் நடை பெறும்.

இம்மாற்றங்கள் பன்னிரு ராசிக் காரர்களுக்கும் ஏற்படுத்தும் பலா பலன்களைப்பார்ப்போம்.

## மேடம்



(அச்சுவினி,பரணி,கிருத்திகை,1-ஆம் பாதம் முடிய)

கோசரப்படி பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமாக உலவாததால் சில இடர்பாடுகள் ஏற்படவே செய்யும். பக்குவமாகச் சமாளிப்பது அவசியமாகும்.குடும்ப நலம் கவனிக்கப்படவேண்டி வரும்.பொருளாதார நிலையில் விசேஷமான அபிவிருத்தியை காண்பதரிது. பணம் கொடுக்கல்- வாங்கல் இனங்களில் எச்சரிக்கை தேவை. யாருக்கும் வாக்கு கொடுக்கவேண்டாம். கொடுத்தால அதைக் காப்பாற்ற முடியாமல் போகும்.தீய பழக்கங்களுக்கும், தீயவர்களின் தொடர்புக்கும் இடம் தரலாகாது.புதிய துறைகளில் முதலீடு செய்ய இந்த நேரம சிறப்பானதாகாது.மாமூலாகச செய்து வரும் காரியங்களிலும்கூட அதிகம் அக்கறை செலுத்துவது அவசியமாகும்.மறைமுகநோய் நொடிகளால் பாதிக்கப்பட நேரலாம். எச்சரிக்கை தேவை. கணவன் மனைவியரிடையே சிறு சிறு சல சலப்புகள் ஏற்பட்டு விலகும். மனதில் ஏதேனும சலனம் ஏற்படும். தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள்,ஏற்றுமதி- இறக்குமதி இனங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் பிரச்சினைகள் சூழும். எடுத்த காரியங்களைச் சிவர ஆற்றிவருவது நல்லது.

ராசிக்கு 2-இல் ராகுவும், 8-இல் கேதுவும் உலவுவதால் சிறு சிறு இடர்பாடுகள் அவ்வப்போது ஏற்படும். இந்துக்கள் அல்லாதவர்களால் தொல்லைகளுக்கு ஆளாக நேரலாம். உணவுப்பழக்கத்தில் கட்டுப்பாடு தேவை. விஷத்தாலும், விஷ ஜந்துக்களாலும் பாதிக்கப்பட நேரலாம். புதபலம் இருப்பதால் வியாபாரகளுக்கு ஆதாயம்கூடும்.கணிதம், எழுத்து, பத்திரிகை, சிற்பம், ஓவியம் போன்ற துறைகளைச சேர்ந்தவர்கள் வளர்ச்சி காண்பார்கள்.

ஏப்ரல் 7-ஆம் திகதிமுதல் சனியானவர் நேர்கதியில் 3-ஆமிடத்தில் உலவத் தொடங்குவதால் நலம்புரிவார். பொதுநலப்பணியாளர்களுக்கும்,தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் அனு கூலமான போக்கு தெரியவரும். செய்தொழிலில் அபிவிருத்தி காணலாம். எண்ணெய்வகையறாக்கள், இரும்பு சம்பந்தப்பட்ட இனங்கள் ,தோல் பொருட்கள்ஆகியவை இலாபம் தரும். 11ஆம் திகதி முதல் செவ்வாய் 10-ஆமிடம் மாறி வலுப்பெறுவதால் முக்கியமான காரியங்கள் நிறைவேறும்.

துணிவோடும்,தன்னம்பிக்கையோடும் செயலாற்றி வெற்றி பெறுவீர்கள்.மற்றையோர் போற்றத்தக்க வகையில் ஓரிரு சாதனைகளையும் ஆற்றுவீர்கள். நிலபுலங்களின் சேர்க்கையோஅல்லது அவற்றால் ஆதாயமோ பெற வாய்ப்புக்கூடி வரும்.ஜுலை 29ஆம் திகதி முதல் குரு 5-ஆமிடம்மாறி உங்கள் ஜன்மராசியையும்,9, 11ஆம் இடங்களையும் பார்ப்பதால் செல்வாக்கும் மதிப்பும் உயரும். மனதிற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் நிகழும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். பெற்றோரால் நலம்கூடப் பெறலாம்.திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிகழச் சந்தர்ப்பம் கூடிவரும். தொலைதூரத தொடர்பு பயன்படும். அயல் நாட்டுத் தொடர்புடன் வர்த்தகம் புரிபவர்கள் ஆதாயம் கூடப்பெறுவார்கள். பிதுரார்ஜித சொத்துக்கள் சேரும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் வருவாய் வந்து சேரும்.தெய்வ தரிசனம், சாது தரிசனம் ஆகியவை கிட்டும்.மந்திர, தந்திரங்களில் தேர்ச்சி உண்டாகும்.தனவந்தர்கள் உதவுவார்கள்.

மருத்துவம்,இரசாயனம், விஞ்ஞானம்,ஆன்மீகம்போன்ற துறைகளை சேர்ந்தவர்களுக்கும்,ஆசிரியர்களுக்கும், மதபோதகர்களுக்கும் முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். பொருளாதாரம் சம்பந்தப்பட்ட இனங்களில் அபிவிருத்தி காணலாம். செப்டம்பர் 8-ஆம் திகதி முதல் ராகு உங்கள் ஜன்ம ராசிக்கும், கேது 7-ஆம் இடத்திற்கும் இடம் மாறுகிறார்கள். இதுவும் அனுகூலமான மாறறமாகாது: என்றாலும் குருவின் சஞ்சாரம் சாதகமாக இருப்பதால் எதையும் சமாளிப்பீர்கள். தெய்வ அனுகூலம் உண்டாகும் .நல்லவாகளும் வல்லவர்களும் உங்களுக்கு உற்ற துணையாக விளங்குவார்கள். மனோபலமும். கூடும்.எதிரிகள் அடங்கிப்போவார்கள் .மக்களுக்காக சுப செலவுகளை மேற்கொள்ள நேரலாம். சர்ப்ப சாந்தியைத் தொடர்ந்து செய்துவருவது நல்லது. அதன் மூலம் இடர்பாடுகள் விலகி,நன்மைகள கூட பெறலாம். குரு வக்கிரத்தில் உலவும்போதும், சனி வக்கிர நிலையில் சஞ்சரிக்கும்போதும் குறிப்பிட்ட கிரகங்களுக்கு பிரீதி, பரிகாரங்களை செய்து வருவது நல்லது.

### ஏப்ரல்,மே,யூன் மாதங்கள பொது நலப்பணிகளில் ஈடுபாடு

ஏப்ரல் மாதம் முதல் சுக்கிரனின் சஞ்சாரம் சிறப்பாக இருப்பதால் கலைஞானம் பளிச்சிடும்.பக்தர்கள்,கலைஞர்கள் ஆகியோர் புகழும் பெருகும். வாழ்க்கைத்துணைநலம் சிறக்கும். கட்டுத்தொழிலில்அதிக இலாபம்பெறலாம்.4-ஆம் திகதிமுதல் குரு வக்கிர நிவர்த்தி பெறுவது ஓரளவுசிறப்பாகும்.இதனால் பிரச்சினைகள் குறைய ஆரம்பிக்கும். 7ஆம் திகதி முதல் சனியானவர் உங்கள் ராசிக்கு 3ஆம்இடம்மாறி நேர்கதியில் உலவுவதால் பொது நல பணிகளில் ஈடுபாடு கூடும். தொழிலாளர்கள்,விவசாயிகள் ஆகியோர் தங்கள் நோக்கம் நிறைவேற பெறுவார்கள். 11-ஆம் திகதி முதல் செவ்வாய் 10-ஆம்இடம் மாறுவது குறிப்பிடத்தக்கது. இதனால் செயதொழிலில் விசேஷமான வளர்ச்சியைக் காணலாம். முக்கியமான எண்ணங்களும் நிறைவேறும். நில புலங்களின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெறவாய்ப்புக் கூடி வரும். இயந்திர பணிகள் இலாபம் தரும்.இரக்கசுபாவம் கூடும். மற்றையோருக்கு உதவி புரிவீர்கள். எதிர்ப்புகள் விலகும்.

### காரியத்தில் வெற்றி

ராசிநாதன் செவ்வாய் 10-ஆமிடத்தில் அமர்ந்து, 10- ஆம்வீட்டோன் சனி 3-இல் வலுத்து,10-ஆமிடத்தைக் குரு பார்க்கும் நிலை அமைவதால் மே மாதத்தில் முக்கியமான காரியஙகளில் வெறறிகாண்பீர்கள். மனோபலம் கூடும்.செயலில் வேகம் பிறக்கும்.மற்றையோர் போற்றத்தக்க வகையில சாதனைபல ஆற்றுவீர்கள். புதிய பதவிகள்,பட்டங்களஆகியவை கிட்டும். வேலையில்லாதவர்கள் தகுந்த ஒரு வாய்ப்பைப்பெறுவார்கள்.வேலையில் இருப்பவர்களுக்கு பதவிஉயர்வு,இடமாற்றம், ஊதிய- உயர்வு ஆகியவை கிட்டும். பொறியியல் ,சட்டம் ,காவல், இராணுவம் போன்றதுறைகளைச் சேர்ந்தவர்கள் சுபீட்சம் காண்பார்கள்.பூமியில் இருந்து வெளிப்படும் பொருட்கள் இலாபம் தரும்.சொத்துக்களின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைக்க [illegible] மிடுக்காக நடைபோடுவீர்கள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு விவகாரங்களில் வெற்றி காணலாம்.

### நற்காரியங்களில் ஈடுபாடு

யூன்மாதத்தில் மனதிற்கினிய சம்பவஙகள் நிகழும்.கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். மாதர்கள்,கலைஞர்கள்,இயந்திர பணியாளர்கள்,எஞ்சினியர்கள்,சட்ட வல்லுநர்கள் ,காவலர்கள்,இராணுவத்தில் பணிபுரிவோர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான சூழ்நிலை நிலவி வரும். உடன் பிறந்தவர்களால நலம் கூடப்பெறலாம்.யூன்8ஆம் திகதி முதல் வியாபாரிகளுக்கு நல்ல திருப்பம் உண்டாகும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் வருவாய் கிடைக்கும்.சமுதாய நலப்பணியாளர்கள் புகழ பெறுவார்கள். மாதப்பின் பகுதியில் அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்கை காணலாம. தகவல தொடர்புத்துறைகள் ஆக்கம் தரும்.நிலபுலங்களால் ஆதாயம் கூடப் பெறலாம்.தந்தை நலம் கவனிக்கப்படவேண்டிவரும். பெற்றோருக்கும் மக்களுக்குமிடையே சிறு சிறு பிரச்சினைகள் சூழும். பக்குவமாக சமாளிப்பது நல்லது. சுப காரியங்களுக்காகச் செலவுகளை

# புத்தாண்டுப்பலன்

மேற்கொள்ளவேண்டிவரும்.

### யூலை ,ஆகஸ்ட் செப்ரெம்பர் மாதங்கள்: எண்ணத்தில் மலர்ச்சி

யூலை மாதத்தில்3,11 -ஆமிடங்களில் உள்ள கிரகங்கள் மூலம் நலம் கூட பெறலாம்.எண்ணத்தில் மலர்ச்சி உண்டாகும் .நல்ல தகவல் வந்து சேரும். உடன் பிறந்தவர்களால் உங்களுக்கும்,உங்களால் அவர்களுக்கும் அனுகூலம் உண்டாகும். .தகவல தொடர்பு துறைகளைச் சேர்ந்தவர்கள்.முன்னணிக்கு உயருவார்கள்.முயற்சி வீண்போகாது. வாழ்க்கைப் பாதையில் வெற்றிக்கான நல்ல வாய்ப்புக்கள் கூடி வரும்.மனதில் துணிவும்,தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.எதிரிகள் ஓடி ஒழிவார்கள்.பொறியியல் ,சட்டம்,காவல், இராணுவம் போன்ற துறைகளை சேர்ந்தவர்களுக்குதொடர்ந்து சிறப்புக்கள் கூடும்.பிரச்சினைகள் குறையும். கடல் வாணிபம் இலாபம் தரும். திரவப்பொருட்களால் ஆதாயம் கூடப் பெறலாம்.மாணவர்களது. திறமை பளிச்சிடும்.இயந்திர பணியாளர்கள் ஏற்றம் பெறுவார்கள். சனிபலத்தால் எண்ணெய், இரும்பு, எ்கு ,தோல் பொருள்கள் ஆகியவற்றின்மூலம் இலாபம் பெறலாம்.29-ஆம்திகதி முதல் குரு 5-ஆம் இடம் மாறுவது வரவேற்கத்தக்கது.

### அரசாங்கத்தாரால் அனுகூலம்

குரு,சனி,செவ்வாய் ஆகிய முக்கிய கிரகங்களின் சஞ்சாரம் ஆகஸ்ட் மாதத்தில் சிறப்பாக இருப்பதால் வெற்றி வாய்ப்புக்கள்கூடும். செல்வாக்கும் மதிப்பும் உயரும். எடுத்த காரியங்கள்இனிது நிறைவேறும். பொருளாதார நிலையில் விசேஷமான வளர்ச்சியைக் காணலாம். மககள் நலம் மகிழ்ச்சி தரும். தெய்வ தரிசனம்,சாது தரிசனம்ஆகியவை கிட்டும். திருமணம் போன்ற சுப காாயங்கள் நிகழ வாய்ப்பு கூடிவரும். தன வந்தனர்கள் உதவு வார்கள். பெற்றோரால்மக்களுக்கும், மக்களால் பெறறோருக்கும் அனுகூலம் உண்டாகும்.மற்றையோர் உங்களை போற்றி புகழ்வார்கள். றேஸ், லாட்டரி, பங்கு மார்க்கட் போன்ற அதிஷ்ட இனங்களால் ஆதாயம் கிடைக்கும். பலவழிகளிலும் பணம் வந்து சேரும். மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும்.அரசாங்கத்தாரால் அனுகூலம் உண்டாகும்.மருத்துவம், இரசாயனம்,விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச்சேர்ந்தவர்கள் சுபீட்சம் காண்பார்கள்.ஆசிரியர்களின் நிலை உயரும்.

### அதிஷ்ட வாய்ப்புக்கள

குரு, சனி,செவ்வாய்ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக இருப்பதாலும், சூரியன் 5- இல் உலாவினாலும்கூட ஆட்சி நிலையில் இருப்பதாலும் தொடர்ந்து நன்மைகள்உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும.அரசியல் வாதிகள்,அரசு பணியாளர்கள்,ஆன்மீகவாதிகள் ,நிர்வாக திறமைகளைச்சேர்ந்தவர்கள், ஆசிரியர்கள்ஆகியோர் செழிப்புப்பெறுவார்கள்.காடு,மலை,வனாந்தரங்களில் தொழில் புரிபவர்களுக்கு அனுகூலமான போக்கு தென்படும்.ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம் கிடைத்து வரும்.செப்ரம்பர்8- ஆம் திகதி முதல் ராகு உங்கள் ஜன்ம ராசிக்கும் ,கேது 7ஆம் இடத்திற்கும்.மாறுவது சிறப்பாகாது. என்றாலும்இராகுவை குருபார்ப்பதால் நலம்புரிவார்.7-ல் கேது உலவுவதாலும் ,சுக்கிரனது சஞ்சாரம் சிறப்பாக இல்லாததாலும் வாழ்க்கைத் துணை நலம் பாதிக்கும்.கூட்டுத் தொழிலில் அதிகம் கவனம் தேவை.கலைஞர்களுக்குசோதனைகள் சூழும். ஆடவர்களுக்குப் பெண்டிரால் பிரச்சினைகள உண்டாகும்.

### அக்டோபர் ,நவம்பர், டிசம்பர் மாதங்கள்:வியாபாரத்தில் வளர்ச்சி

அக்டோபர் மாதத்தில் குரு பலம் காரணமாக தொடர்ந்து நற்பலன்கள உண்டாகும். மக்கள் நலம் மகிழ்ச்சி தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடிவரும்.உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். பொருளாதார நிலை திருப்த்திகரமாக இருந்து வரும் 3ஆம் திகதி முதல் புதன் 6-ஆம் இடம்மாறி வலுப்பெறுவதால் வியாபாரத்தில் விசேஷமான வளர்ச்சியைக் காணலாம். கணிதம், எழுத்து, பத்திரிகை, சிற்பம்,ஓவியம் போன்ற துறைகளைச்சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள்.எலக்ட்ரானிக் கம்பியூட்டர் துறைகள் இலாபம் தரும்.இயந்திர பணியாளர்கள் ஏற்றம் பெறுவார்கள். எஞ்சினியர்களுக்கு வெற்றிகள் குவியும். வாழக்கைத்துணை நலனில் கவனம் செலுத்தி வருவது நல்லது. பயணத்தின்போது எச்சரிக்கை தேவை. மற்றையோரிடம் சுமுகமாக பழகி வருவது நல்லது.26-ஆம் திகதி முதல் சனி வக்கிரம் பெறுவது சிறப்பாகாது. குடும்பநலன் கவனிக்கப்படவேண்டி வரும்.

### கலைஞர்களுக்கு வெற்றி

நவம்பர் மாதத்தில் குரு, செவ்வாய், சுக்கிரன் ஆகியோரதுசஞ்சாரம் சிறப்பாக இருப்பதால் பொருளாதார நிலை திருப்திகரமாக இருந்து வரும். மக்களாலும் உடன் பிறந்தவர்களாலும்,வாழ்க்கைத்துணைவராலும் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் சலசலப்புகள் குறையும்.கலைஞர்கள் வெறறி நடை போடுவார்கள். எதிர்ப்புக்கள் குறையும்.பொறியியல் சட்டம்,காவல்,இராணுவம்போன்ற துறைகளைச்சேர்ந்தவர்களுக்கு வெற்றிமேல் வெற்றிகள் குவியும். நிலபுலங்கள் சேரும்.சொத்துக்களால் வருவாயும் கிடைத்துவரும். மனதில் துணிவும் தன்னம்பிக்கையும் நிறைந்திருக்கும். மற்றையோருக்கு உதவுவதில் ஆர்வம் கூடும். 8ஆம் திகதி முதல் வியாபாரிகள் நல்ல திருப்பத்தைக்காண்

**ஜோதிட பூஷணம் வித்வான் வே. லட்சுமணன்**

பார்கள்.16ஆம்திகதிமுதல் மக்களாலும்,அரசாங்கத்தாராலும் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படும். 22ஆம் திகதி முதல் அதிஷ்ட வாய்ப்புக்கள் கூடும். பெண்களால் ஆடவர்களுக்கு அனுகூலம் உண்டாகும்.புதிய ஆடை, அணிமணிகள் சேரும் .குடும்பத்தில குதூகலம் உண்டாகும்.கேளிக்கை, உல்லாசங்களிலும் விருந்துபசாரங்களிலும் கலந்து கொள்ள சந்தர்ப்பம்கூடிவரும்.

### புனித பணிகளில் ஈடுபாடு

சுக்கிரன் 9-ல் அமர்ந்து 5- ல் உள்ள குருவினால் பார்க்கப்படுவதால் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடிவரும். மனைவி மக்களால் சுகம்கூடும்.கொடுக்கல்-வாங்கல் இனங்கள் இலாபம் தரும். உத்தியோகதத்ர்களுக்கும்,கலைஞர்களுக்கும்நல்ல வாய்ப்புக்கள் கூடிவரும். 5ம் திகதி முதல் செவ்வாய் 12- ஆமிடம்மாறுவதால் எதிர்பாராத செலவுகள்,இழப்புக்கள் ஆகியவை ஏற்படும்.உடன் பிறந்தவர்களின் நலனில் கவனம் தேவை.வீண் வம்பு கூடாது.பயணத்தின்போது விழிப்புடன் இருப்பது நல்லது. எதிலும் பதட்டப்படாமல், நிதானமாக ஈடுபடுவது அவசியமாகும். அதன் மூலம் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்பலாம். குரு பலம் இருப்பதால் சங்கடங்கள் குறையவே செய்யும்.மாதத்தின் பின் பகுதியில் சூரியன் 9-ஆம்இடம் மாறி குருவால் பார்க்கப்படுவதால் புனிதப்பணிகளில்ஈடுபாடு கூடும்.அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும்.மக்களால் பெற்றோருக்கும் நலன் கூடும்.

### சங்கடங்கள் குறைய... நற்பலன்கள் கூட!

இந்த புத்தாண்டு முழுவதுமே ராகு,கேது ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக இல்லாததால் சர்ப்ப [illegible] ஒரு முறை காளஹஸ்தி சென்று வரலாம்.குருவும் சனியும் வக்கிர நிலையில் உலவும் காலங்களில் முறையே குருவுக்குப்பிரீதி பாிகாரங்களைச் செயவது நல்லது. முழு நம்பிக்கையோடு பிரீதி பரிகாரங்களை செய்வதால் பலவீனமான கிரகங்களின் மூலம் விளையக் கூடிய கெடு பலன்களை குறைத்துக கொள்ளலாம்.யூலை மாதம் 29ஆம் திகதிமுதல் வருடக் கடைசி வரையிலும் குருவின்பலம் சிறப்பாக இருப்பதால் பல சிறப்புகளை பெறுவது உறுதி .மேலும் இந்த ஆண்டில் பெரும்பகுதிக்காலம் உங்கள் ராசிநாதன் ஆகிய செவ்வாயில் சஞ்சாரம் விசேஷமாக இருப்பதால் நற்பலன்கள் கூடும் என்றே சொல்லலாம்.

மேலும்உங்கள் ஜனன கால ஜாதகப்படி இந்த ஆண்டின் பின் பகுதியில் தசா,புத்தி,அந்தரங்கள் சிறப்பாக அமையுமானால் பருத்தி புடவையாய்க் காய்த்தது போலாகும்.இரட்டிப்பு சுப பலன்கள் ஏற்படும்.

மொத்தத்தில் இந்த 2003 ஆம் ஆண்டின் பின் பகுதிக்காலம் விசேஷமாக அமையும் என்று உறுதியாக சொல்லலாம். முன் பகுதியில் சாந்திபரிகாரங்களை செய்வதன் மூலம்சங்கடங்கள் குறையவும்,நறபலன்கள் கூடவும் வழி பிறக்கும். (தொடரும்)

## 25ஆயிரம் கொடுப்பனவு வழங்கல்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் மாமுனை முதல் சுண்டிக்குளம் வரையிலான பகுதி வரை மீளக்குடியேறிய மககளிந்த புனரமைப்பு பணிக்காக இருபத்தையாயிரம் ரூபா கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டு வருகிறது. (க-42)

## இன்று பேச்சுத்திறன் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 17 பாலர் பாடசாலை மாணவர்களின் பேச்சுத்திறன் விழா இன்று செவ்வாய் கிழமை மு.ப 9 மணிக்குயாழ் இநது ஆரமப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். பரியோவான் கல்லூரி ஆசிரியர் எஸ்பி. காசிநாதன் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வட பிரதேசத்திற்கான இந்துப்பேரவைத் தலைவா சு.நித்தியானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (க-10)

## துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு

(கொழும்பு)

இராஜஸ்தானைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட பிரேம குமாரி அமைப்பின் இலங்கைத் தெகிவளையில் உள்ள கிளைக்கு இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் அலுவலகப் பாவனைக்கென துவிச்சக்கரவண்டி ஒன்றை வழங்கியுள்ளார். (உ)

## சிறுமியின் சைக்கிள் திருட்டு

(கல்வயல்)

தென்னம்பிள்ளை நிவாரணப் படிவம் பெறுவதற்காக கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு வந்த சிறுமியின் புதிய லுமாலா சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை கல்வயல் ஜே/ 305 கிரா சேவையாளர் அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது. (க-111)

## ஆலயத்தில் இயங்கும் பாடசாலைகள்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் இரு பாடசாலைகள் கட்டடவசதிகள ஏதுமற்ற நிலையில் ஆலயத்தில் இயங்கி வருகின்றது.

சென்ற வருடம் மக்கள் மீளக் குடியேறியதனைத்தொடர்ந்து இப் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டன. யாழ் தாளையடி றோ.க.த.க. பாடசாலை தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்திலும்,யா/ செம்பியன் பற்று றோ.க.த.க பாடசாலை சென் பிலிப்பு நேரியார் ஆலயத்திலும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-42)

# அவசர வாழ்க்கையும், அதிசூடான உணவுகளும் குடற்புண்ணை உருவாக்கும் தன்மை வாய்ந்தன

அல்சர் எனப்படும் குடற்புண் ஏற்படுவதற்கு அமில உற்பத்தி அதிகமாகச் சுரப்பதே முதற் காரணம் எனலாம். அடுத்து சாதாரணமாக அமில உற்பத்தி இருப்பினும், அவ்வமிலத்தின் தன்மையை ஏற்றுக்கொள்ள முடியாததால் இரைப்பையின் கோழைப்படலத்தில் புண் தோன்றும். பொதுவாக மூளைக்கு அதிகமாக வேலை கொடுக்கும் டாக்டர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களும், வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் முற்பது முதல் நாற்பது வயதுள்ளவர்களுமே அல்சரால் பாதிக்கப்படுகிறார்கள். நாட்பட்டகுடற்புண் 5சதவீத்தினருக்குப் புற்றுநோயாக மாறும் வாய்ப்புண்டு. எல்லோருக்குமல்ல, அல்லசின் கூடவே சில நோய்களும காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக கொக்கிப்புழு, காசநோய், அமிபியாசிஸ், கல்லீரல் இறுக்கம் போன்ற நோய்கள் அத்துடன் காணப்படுகின்றன.

**அரிசி,மசாலா உபயோகம்**

இயந்திர வாழ்க்கை வாழும் நாட்டினரே அல்சரால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக உலக ரீதியாக எடுத்துக் கொண்டால் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாட்டினரைச் சொல்லலாம். கீழ்த்திசை நாடுகளில் இந்தியா, இலங்கை, வங்காளதேசம், மலேசியா போன்ற அரிசியை உணவாக உண்ணும நாடுகளில் அதிகமக்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்தியாவை எடுத்துக் கொண்டால் வடஇந்தியரை விட தென்னிந்தியர்களுக்கே அல்சர் அதிகமாகக் காணப்படுகிறது. தெனனிந்திய மக்களிலும், முக்கியமாக அரிசி,மரவள்ளிக் கிழங்கு முதலியவைகளை உண்பவர்களுக்கும, உணவுடன் மிளகாய் வற்றல், மிளகு போன்ற மசாலாப் பொருட்களை உண்பவர்களுக்கும் குடற்புண் ஏற்படுகின்றது.

பெண்களைவிட ஆண்களே குடற்புண்ணால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஆண்களில 30 பேருக்கு ஒருவர் வீதம் குடற்புண்ணால் பாதிக்கப்படுகினறனர் என்று புள்ளி விபரம் கூறுகின்றது. பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்படாமைக்குக் காரணம், அவர்கள் ஆண்களைப்போல் அவ்வளவு அதிகமாக மன உளைச்சலுக்கு இடங்கொடுப்பதில்லை. அல்லது ஆட்படுவதில்லை. மேலும் ஈஸ்டிரோஜன் என்ற ஹார்மோன் பெண்களின் உடலில் சுரப்பதும் ஒரு காரணம் எனலாம்.

**யாருக்குக் குடற்புண் ஏற்படுகிறது?**

இந்தியாவில் எடுக்கப்பட்ட மருத்துவப் புள்ளிவிபரப்படி 'o' வகை இரத்தப் பிரிவினருக்கே குடற்புண் சுமார் 45% வரை காணப்படுகிறது. 'A' வகை இரத்தப் பிரிவினருக்குப் புற்றுநோய் அதிகமாகக் காணப்படுகிறது. சுடச்சுட உணவு வகைகளை உண்பதாலும், பானங்களைக் குடிப்பதாலும், குடற்புண் ஏற்படுவது உண்மை. அது மாத்திரமல்ல இதனால் புற்றுநோய் வரவும் வாய்ப்புக்கள் உண்டு. சுடச் சுடக் குடிப்பவைகளில் கோப்பி, தேநீராக இருப்பின் பாதிப்பு அதிகமாக இருக்கும். புகைப்பவர்களுக்கும், மதுப்பழக்கம் உடையவர்களுக்கும், மற்றவர்களைக் காட்டிலும் மிக, அதிகமான விதத்தில் அல்சர் ஏற்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. தூக்கமின்மைக்கும் குடற்புண்ணுக்கும் நிச்சயமாகத் தொடர்பு உண்டு. எப்படியெனில், உணவு உண்ட பிறகு, இரைப்பையில் செரிமான மான உணவு அங்கிருந்து சிறு குடலுக்குச் செல்கிறது. அவ்வாறு இரைப்பை காலியாகும் பொழுது, அமில உற்பத்தி அதிகமாகி குடலில் வலியை ஏற்படுத்துகிறது. இசசம்பவம் நள்ளிரவில் தூக்கத்தைக் கெடுத்து உணவை நாடவைக்கும்.

ஆபிரிக்க நாடுகளில் தீட்டப்படாத உணவு தானியங்களை உண்பவர்களுக்கும், இந்தியாவில் கோதுமை அதிகமுள்ள உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்பவர்களுக்கும் மிகக் குறைவாக குடற்புண ஏற்படுகிறது. குடற்புண்ணின் நிலையையும், அதனால் பாதிக்கப்பட்ட பகுதியையும் எக்ஸ்-கதிர்(X-ray) படம் எடுத்துத்தான கண்டறிய வேண்டுமென்பதில்லை, இரைப்பையில் ஊறும் அமிலத்தை உறிஞ்சி, அதன் அளவை அறிவதன் மூலமாகவும், இரைப்பை உள் நோக்கிக் கருவி (ENdoscopy) மூலமும் மிகத் துல்லியமாகக் குடற்புண்களின் அளவு, இருப்பிடம், தன்மை, எண்ணிக்கை ஆகிய விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**குடற்புண் குணமாக**

குடற்புண்ணைக் குணமாக்க வேண்டியவர்கள், மிள்காய், மிளகு, மசாலாப் பொருட்கள், சூடான உணவு வகைகள், சூடான பானங் கள், கோப்பி, தேநீர், மதுவகை களைக் கண்டிப்பாக விலக்க வேண்டும். கனி வகைகளில், கொய்யா, அன்னாசி மற்றும் புளிப்பான கனிகள் ஒவ்வாதவைகள், ஆரஞ்சு, எலுமிச்சை ஆகியவற்றின சாற்றையும் வெறும் வயிற்றில பருகக் கூடாது. ஊறுகாய், மற்றும் சட்னி வறுவல், அதிக காரமுள்ள - மசாலா சேர்த்த உணவு வகைகளை நமது உணவுப் படடியலிலிருந்து ஒதுக்குவது குடற் புண்களை விரைவில் குணமாக்கவும், குடற்புண்கள் ஏற்படாமல் தவிர்க்கவும் உதவி செய்யும்.

## மருத்துவ விளக்கம்

குடற்புண்ணுடையவர்கள் உண்ணா நோன்பிருப்பதைத் தவிர்த்தல் வேண்டும். ஏனெனில் இரைப்பையில் உணவு இல்லாத நிலையில், அமிலம் அதிகமாக உள்ளதால் குடற்புண்களை மேலும் தீவிரப்படுத்தும். குடற்புண்ணானது உணவுக் குழலின் கீழ்ப்பகுதியில் தாக்கியிருக்குமாயின் ஒன்று அல்லது இரண்டு தலையணைகளைக் கூடுதலாக - தலையும் முதுகும் சற்று உயர்வாக இருக்கும் நிலையில் - வைத்துத் தூங்குவது வலியைக் குறைக்கும், முதுகுபபக்கம் வலியிருக்குமாயின் குப்புறப் படுத்து தூங்குவதனால் வலியைக் குறைக்கமுடியும்.

**மனநிலைத் தொடர்பு**

மூட்டுவலிக்காகத் தொடர்ந்து நீண்டகாலத்திற்கு ஆஸ்பிரின், பினைல், புருட்டஜோன் போன்ற மருநதுகளைப் பாவிப்பதும், ஆஸதுமா போன்ற நோயகளுக்கான கார்ட்டி ஜோன் மருந்துகளும் குடற்புண்ணை ஏற்படுத்தும், இத்தகைய மருந்துகளைத் தவிர்ப்பது நல்லது. முடியாதவிடத்து அமில எதிர்ப்பு மருந்துகளுடன் சேர்த்துக் கொள்ளவது நல்லது. மகிழ்ச்சியான மனநிலை உடலுக்கு நலத்தைக கொடுக்கிறது. மகிழ்ச்சியற்ற வாழ்வு உடல்நலத்தைகெடுக்கிறது என்று சான்றோர்களும் மருததுவத்துறை வல்லுனர்களும் உளவியல் அறிஞா களும் கூறுவர், அதுபோல, மன நிலைக்கும் குடற்புண்ணுக்கும் தொடர்பு உண்டு.

மன எழுச்சியுடையவர்களுக்கு... மன உளைச்சல்,பட படப்பு, பரபரப்பு, இடத்திற்கு இடம், நேரத்திற்கு நேரம் வாழும் வாழ்க்கையையொட்டி, ஏற்படும் என்பது நாம் அறிந்த ஒன்று. எடுத்துக் காட்டாக இராணுவ வீரர்களுக்கு வீட்டை விட்டுப் பிரிந்து வாழும் நாட்களில் அதிகமாகக் குடற்புண் ஏற்படுகிறது. காரணம் என்ன? மகிழ்ச்சியின்மை, மற்றும் முன்னர் குறிப்பிட்டது போல, மூளைக்கு அதிகமாக வேலை கொடுக்கும். மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களுடன், அவசர வாழ்க்கை நடத்து பவர்களுக்கும் குடற்புண் அதிக மாக ஏற்படும்.

**ஆலோசனைகள்**

குடற்புண்ணால் அவதிப்படுபவர்களும், குடற்புண் வராமல் தவிர்த்து, தங்கள் உடல் நலனில் அக்கறை காட்டுபவர்களும் பின்வரும் ஆலோசனைகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

1) மன உளைச்சலைத் தவிர்த்து, மனமகிழச்சியுடன் வாழுங்கள். 2)போதுமான அளவு உடலுக்கும், உள்ளத்திற்கும் ஓய்வு கொடுங்கள். 3) முறையாக நேரம்தவறாது சிறு அளவாக மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை உணவு உண்ண வேண்டும். உணவுடன் பால், மோர் ஆகியவற்றைச் சற்றுக் கூடுதலாக அருந்துவது நல்லது. 4) மது, கோப்பி, தேநீர், புகைப்பிடித்தல், கோலா வகைகள், வறுத்து - பொரித்த உணவு வகைகள் ஆகியவற்றை உங்களது உணவுப் படியலிலிருந்து தவிர்த்து, சரியான உணவுப் பழக்கத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். 5) குடற்புண் என்று அறிந்தவுடன், தானாக மருந்துக் கடைகளுக்குச் சென்று மருந்து வாங்கும் பழக்கத்தைத் தவிர்த்து, தேவை யான மருந்துகளை மருத்துவரின் ஆலோசனைப்படி வாங்கிப் பயன்படுத்த வேண்டும்.

**டாக்டர் சு. நரேந்திரன்**
**தஞ்சை மருத்துவக் கல்லூரி**

## ஓவியப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஜே.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனம், நாளை புதன் கிழமை தொடக்கம் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் இளம் கலைஞர்களுக்கான ஓவியப்பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவுள்ளது. (உ)

## அறிமுகவிழா

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு வழாமலர் அறிமுக விழா நாளை புதன்கிழமை பி.ப 4.30 மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக இந்து கலாசார அமைச்சின் உதவப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

மலரின் அறிமுக ஆய்வுரையினை கலாநிதி க. குணராசாவும் சிறப்புரையை பழைய மாணவர் சங்கச் செயலாளர் கோவை ஜெயனும நிகழ்த்தவுள்ளனர். (உ-79)

## மினிபஸ் சேவை நடாத்தக் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறைக்கான மினிபஸ் சேவையினை 778 இலக்கப் பாதையூடாகவும்நடத்தப்படவேண்டும் என பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது 780,777 ஆகிய பாதைகளூடாகவே ஊர்காவற்றுறைக்கான பேருந்துமற்றும் மினிபஸ்சேவைகள் இடம்பெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-75)

# நடுநிலையாகச் செயற்படுவதே எமது தலையாய கடமை

**கண்காணிப்புக்குழு திருமலை மாவட்டதலைவர் தெரிவிப்பு**

(திருமலை)

இலங்கையில்வாழும் மூவின மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் நடுநிலையாக செயற்பட்டு நியாயம் பெற்றுக்கொடுப்பதே எமதுகடமை.

இவ்வாறு யுத்தநிறுத்த கண்காணிப்புக்குக்குழுவின் திருகோணமலை மாவட்டத்தலைவர் ஜோன் லெடம் தெரிவித்துள்ளார்.

மூதூரில் கடந்த சனிக்கிழமை கண்காணிப்புக்குழுவிற்கும் முஸ்லிம் மீனவர்களிற்கும் இடை யிலே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே இதனைத்தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்துபேசுகையல்நாம் வெளிநாட்டவர்கள் என்பதாலும் கண்காணிப்புபணியில் ஈடுபடுவதாலும் சிறு சம்பவம் இடம் பெற்றாலும் அதுதொடர்பாக விசாரணை நடத்துவதும் ஆராய்வதும் எமது கடமை என்றார்.

இதேசமயம் கடந்தமாதம் 31ஆம்திகதி ஸ்தம்பூர் கடற்பகுதியில் 2 மீனவர்கள் காணாமல் போனதாகவும் இம்மாதம் 6 ஆம்திகதி தோப்பூர்பகுதியில் 6 முஸ்லம்கள் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டதாகவும் முஸ்லிம் மீனவர்கள் இப்பேச்சில் சுட்டிக்காட்டினார்கள்.

இதற்கு பதிலளித்த போர் நிறுத்தக கண்காணிப்புக்குழுத் தலைவர் இதுதொடர்பாக தாம் விரை வில தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி உரிய தீர்வினைப் பெற்றுத்தரு வதாக உறுதியளித்திருந்தார். (க-10)

# இலங்கை அரசாங்கத்துடன் புலிகள் சமனாகவே உள்ளனர் சர்வதேச அங்கீகாரமும் உண்டு

**யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தெரிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்துடன் விடுதலைப்புலிகளை சம பலத்துடன் உலகநாடுகள் .நோக்குமளவிற்கு விடுதலைப்புலிகளின் போராட்ட யுக்திமுறை அமைந்துள்ளது என யாழ்.மாவட்ட அரசியல்துறைப் துணைப்பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் க. சிவராசா தலைமையில அண்மையில் இடம்பெற்ற மேதினம் தொடாபான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்அங்கு தொடர்ந்து பேசுகையில், தமிழர்மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக எவ்வளவோமுயற்சிகள் செய்து பலதடைகளைத் தாண்டிவந்துள்ளோம்.

7 வது சுற்றுப்பேச்சுவார்த்தை இடம்பெறஉள்ளது. நாம் எப்போதும தமிழரின் உரிமைகளைத்தான் கேட்டு வருகின்றோம்.

எல்லா மக்கள்மத்தியிலும் பேச்சுவார்த்தை நிறைவேறுமா, நிறைவேறாதா என்ற எண்ணம் தோன்றியுள்ளது. எம் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் சமாதானம் நிலைபெறும். ஒருவருடம ப,ர்த்தியாகியும் இன்,னும் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப் படவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தம்கைச்சாத்தானதின்பின் விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணம் எம் மக்கள் பெரும சநதோஷம்அடைந்தார்கள். ஆனால இனறும் மக்களுடைய கஷ்டங்களை தீர்க்க எமக்கு அதிகாரம் கிடைகக வில்லை. இருந்தபோதும் நாம் முக்கியபிரச்சினைகளை தீர்த்து வருகின்றோம்.

தமிழீழ விடுதலைப்போராட்டம இன்னும் ஓயவில்லை. விடுதலை கிடைக்கும் வரை தொடர்ந்த வண்ணம் இருக்கும். இராணுவஉயர் பாதுகாப்பு வலயம் என்றுசொல்லி மக்கள்சொந்தஇடத்திற்கு செல்ல முடியாதநிலை, மீனவர்கள் பிரச்சினை அத்துடன் 52 பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளமையால் மாணவர்களின் கல்விபெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இன்னும் மக்கள்மீதான அடக்குமுறை தொடர்நத வண்ணம் உள்ளது. எனவேதான் எதிர் வரும மேதினத்தை சர்வதேசத்திற்கு எமது பிரச்சினைகள் எடுத்துக்காட்டும் நாளாகப்பயன்படுத்துவோம் என்றார்.

கூட்டமைப்பைச்சேர்ந்த எம்.கே. சிவாஜிலிங்கம், பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் தலைவர் சிறில், தமிழீழ பொருணமியப்பொறுப்பாளர் ஞானவேல் மற்றும் தமிழர் ஆசிரியர்சங்கத்தின் செயலாளர் பஞ்சலிங்கம், கூட்டுறவுசங்கங்களைச் சேர்ந்தவர்கள் அரச அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள், சுரேஸ் பிரேமச்சந்திரனின் அணியைச்சேர்ந்தபிரமுகர்கள் என பலர் இநநிகழ்வில் கலந்து கொண்டனர்.

(க-07)

# கோப்பாய் கோட்டத்தில் ஆங்கில ஆசிரியர்தட்டுப்பாடு

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப்பாடசாலைகளில் நீண்டகாலமாக நிலவிவருகின்ற ஆங்கிலஆசிரியர் பற்றாக்குறையினைப் போக்கசம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என பெற்றோர்கள்சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளில் ஏற்கனவே கடமையாற்றிவந்த ஆங்கில ஆசிரியர்களின் நியமனம் மேலும ஒருவருடத்திற்கு புதுப்பிக்கப்பட்டு நீடிக்கப்பட்டபின்னர் இவர்களை யாழ்.வலயத்திற்குட்பட்ட வேறுகோட்டப்பாடசாலைகளுக்கு பதில்நியமனம் வழங்காமல் இடம்மாற்றியுள்ளமை தங்களை மேலும் கவலையடையச் செய்துள்ளதாகவும் பெற்றோர்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளால் மாணவர்களின் ஆங்கில அறிவு மட்டம் மேலும் வீழ்ச்சிஅடைய வாய்ப்பு ஏற்படும் என்று பெற்றோர்கள் கவலைவெளியிட்டுள்ளனர். (க-79)

# புதியபடைமுகாம் அமைக்க 55 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை முன்னர் இருந்த வளாகத்தில் பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு 55 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்ததாக தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

யாழ். மாநகரசபை வளாகத்தில் இந்த இராணுவமுகாம் அமைப்பதற்கு குடாநாட்டுமக்கள் தமது கடுமையான எதிர்ப்பைதெரிவித்திருந் தமையால் முகாம்அமைக்கும் முயற்சியில் அரசு தற்காலிகமாக கைவிட்டிருந்தது.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இராணுவ முகாம்ஒன்றை அமைக்கும்முயற்சியில் இராணுவம் விடாப்பிடியாக இருப்பதால், மாநகரசபைஎல்லைக்கப்பால் இராணுவமுகாம் அமைக்கும் நோக்கம் இராணுவத்தினருக்கு இல்லைஎன்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ். மாநகரசபை வளாகம்முன்பிருந்த இடத்தைவிட பிறிதோர்இடத்தில் அதனை அமைப்பதற்கான இடத்தைதெரிவு செய்ய கடந்தவாரம் இராணுவ உயர்அதிகாரிகள் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இன்று ஒரு தகவல்

### அரசு எவ் வழி!

ஒரு ராஜா ஒரு நாள் ஒரு வேட்டைக்குப் போனார். அப்படிப் போகின்ற வழியில் ஓர் இடத்தில் தங்கினார். அது ஒரு சிறு கிராமம். அரண்மனையிலிருந்து எடுத்துக் கொண்டு வந்திருந்த சாப்பாட்டை பரிமாறினார்கள். சாப்பிட ஆரம்பித்தார். அப்பொழுது தான் ஒரு விஷயம் தெரிந்தது அதாவது சாப்பாட்டில் உப்புப் போதவில்லை. உப்பு கொஞ்சம்குறைவாக இருந்தது. உடனே அந்த ராஜா ஒரு சேவகனைக்கூப்பிட்டு 'குதிரையில் ஏறி நேராக அரண் மனைக்குப்போய் சாப்பாட்டில் போட்டுச் சாப்பிடுவதற்கு கொஞ்சம் உப்பு எடுத்துக் கொண்டுவா' என்றார். பக்கத்தில் நின்று கொண்டிருந்த அமைச்சர் இதைக் கவனித்தார். உடனே மெதுவாக குனிந்து ராஜாவிடம் ஒரு யோசனை சொன்னார்.

'அரசே! கொஞ்ச உப்புக்காக இங்கிருந்து அவ்வளவு தூரத் திற்கு போகவேண்டுமா? இப்பொழுது நாம்நாம் தங்கியிருக்கிற இந்தக்கிராமமும் நமது ஆட்சிக்கு உட்பட்டது தானே!இங்கேயே ஏதாவது ஒரு வீட்டில் கொஞ்சம் உப்பு வாங்கிக்கொள்ள வேண் டியது தானே! ராஜாவுக்கு கொஞ்சம் உப்புத்தேவை என்றால் போதாதா? உப்பு மூட்டை மூட்டையாக வந்து குவிந்து விடாதா? இந்த சிறிய விஷயத்துக்காக ஒரு சேவைகளை அரண்மனை வரைக்கும் அனுப்பவேண்டுமா?' என்றார் அமைச்சர்.

ராஜா நிமிர்ந்து பார்த்தார். அமைச்சரே! நீங்கள் சொல்வது மாதிரி இங்கேயே வாங்கிக்கொள்ளலாம் தான் இருந்தாலும் சாப்பாட்டுக்காக நான் இங்கே கொஞ்சம் உப்பு வாங்கினேன் என்று தெரிந்தால் போதும் நம்முடன் வந்திருக்கின்ற ஊழியர்கள் இந்த ஊரையே அல்லவா வாங்கி விடுவார்கள்' என்றாராம். பார்த் தீர்களா! இதிலிருந்து என்ன தெரிகிறது? ஒரு ராஜாவாக இருக் கிறவர் அல்லது ஒரு கூட்டத்திற்கு தலைவராக இருக்கிறவர் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது என்பது தெரிகிறது.

அவர் இலேசாகஒரு தப்பு பண்ணினாலும் அதையே ஒரு ஆதார மாக வைத்துக் கொண்டு ,அவருக்கு கீழே இருக்கிறவர்கள் ஏகப் பட்ட தப்புப்பண்ண ஆரம்பித்து விடுவார்கள். ஒரு மன்னருக்கு இருக்கவேண்டிய தகுதியிலே இது மிகவும் முக்கியம். அடுத்த படியாக இருக்கவேண்டிய தகுதி வாக்குத்தவறாமை! சொன்ன சொல்லை காப்பாற்றவேண்டும். சொல்வது ஒன்று ! செய்வது ஒன்றாக இருக்கக்கூடாது . இதற்கும் ஒரு கதை உண்டு.

ஒரு ராஜா அவருக்கு ஒரு நண்பர். அந்த நண்பர் ராஜாவைப் பார்ப்பதற்காக வந்தார். 'அரசே ! என்னுடைய பிள்ளைகளுக்கு தின்பண்டம் வாங்கவேண்டும் ஒரு ரூபாய் இருந்தால் கொடுங் கல்' என்றார். 'சரி நீ கேட்டபடி உனக்கு பணம் தருகிறேன். ஆனால் அதற்கு முன் நாமிருவரும் போய் ஒரு வில்வித்தை போட்டியை பார்த்து விட்டு வருவோம் வா!' என்று கூப்பிட்டார். சரி ... என்று இவரும் கிளம்பினார். போட்டி நடக்கின்ற இடத்துக்கு இருவரும் புறப்பட்டு போனார்கள்.

அங்கு பெரிய பெரிய ஆட்களெல்லாம் அம்பு விட்டு கொண்டி ருக்கிறார்கள். ஆனால் எந்த அம்புமே சரியான இடத்துக்குப் போய்ச் சேரவில்லை. எல்லாம் குறி தவறியே போய்க்கொண்டிருந் தன. மன்னர் பார்த்தார். அவருக்கு கோபம் வந்து விட்டது. 'என்ன இது யாருக்குமே சரியாக அம்பு விடத் தெரியவில்லை!' என்று சொல்லிக்கொண்டே ஒரு அம்பையும் வில்லையும் வாங்கினார். தன்னுடன் வந்திருந்த நண்பரிடம் கொடுத்தார். 'நீ இந்த அம்பை விடு பார்க்கலாம்' என்றார். இவர் அம்பு எய்தார் குறி தவறாமல் போய் அந்தப்புள்ளியில் குத்திக் கொண்டது. மன்னருக்கு மிகவும் பெருமையாக இருந்தது. மகிழ்ச்சியாகவும் இருந்தது. உடனே ஒருநூறு ரூபாவை எடுத்து அவருக்கு அன்பளிப்பாக

# முதியோர் நலனோம்பு திட்டங்களை முன்னெடுக்க ஏதுவாக விபரத் திரட்டு

(சுதுமலை)

வடக்கு கிழக்கு மாகாணப் பகுதியில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் நலன் பேணல் தொடர்பான சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களிற் கான கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் வவுனியா அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது. முதற்கட்டமாக வடக்கு கிழக்கு மாகாணப்பகுதியில் தெரிவு செய் யப்பட்ட 15 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 54 உத்தியோகத்தர்கள் மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள்.

இலங்கையின் சனத்தொகை யில் 10 வீதத்திற்கும் மேற்பட்டவர் கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். வருங்காலத்தில் இத்தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ள தால் வயது முதிர்தலின் போது அவர் களின் உடல் உள நன்னிலை களை பேணுவதே இக்கலந்துரை யாடலின் முக்கிய நோக்கமாகும்.

முதற்கட்டமாக கிராமங்கள் தோறும் முதியோர் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. இவ் ஆய்வின்போது முதிர்ந்தோரின் தேவைகள் அவர்கள் எதிர்நோக் கும் பிரச்சினைகள், நோய்கள் என்ப வற்றிற்கு உடனடித்தீர்வு காண்பதற் குரிய திட்டவரைபுகள் தயாரிக் கப்படவுள்ளன.

இவ்ஆய்வின்போது அவர்களது வருமான நிலை ,பராமரிப்பு உதவி, கண்பார்வை, கேட்கும் திறன், நோய் நிலை போன்ற விடயங் களும் ஓய்வு நேரங்களை செல வழிக்கும் விதம் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபடும் திறன் அவர் களது எதிர்பார்ப்பு போன்ற விபரங் கள் திரட்டப்படவுள்ளன.

தற்போது முதியோர்கள் பல் வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவர்களில் பலர் உள நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டிருந் ததையும் கண்டறியப்பட்டுள்ளதால் ஆரோக்கியமான வயது முதிர்தலுக் கான மேம்பாட்டு வேலைத்திட்டங் கள் பல புதிதாக அறிமுகப்படுத்து வதன் மூலம் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் எனவும் மேற்படி கலந்துரையாடலில் வலியுறுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-252)

# ம. உ. ஆ. குழுவின் பணிகளை மேம்படுத்த நியூசிலாந்து உதவும்

(கொழும்பு)

உள்ளூர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடவடிக் கைகளை மேம்படுத்த நியூசிலாந்து அரசாங்கம் முன்வந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இலங் கையும் நியூசிலாந்தும் ஏற்கனவே கலந்துரையாடல்களை நடத்தியுள் ளன.

இந்த வகையில், நியூசிலாந்து அரசாங்கம் உள்ளூர் மனித உரிமை கள் ஆணைக்குழு சம்பந்தமாக ஆரம்பிக்கவிருக்கும் திட்டங்களை அந்நாட்டு இலங்கைத்தூதுவர் மூலம் மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு அறிவித்துள்ளது. யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டு சமா தான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட இவ்வேளையில், மனித உரிமை கள் ஆணைக்குழுவின் நட வடிக்கைகளை விருத்தி செய்வது அவசியம் எனக்கருதியே நியூ சிலாந்து அரசாங்கம் இந்த உதவியை வழங்க முன் வந்துள் ளதாக ஆணைக்குழு அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார். (உ-8)

# ஐ.நா.வின் அதிகாரத்தை மீள் நிலை நிறுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்

## கோபி அனானுக்கு டிரோன் கடிதம்

(கொழும்பு)

ஈராக்கில் நிலவும் இன்றைய நிலைமையில் ஐ.நா. வின் அதிகாரம் அதன் செயற்பாடு, நம்பகத்தன்மை என்பனவற்றை மீள நிலை நிறுத் தும் உடனடி நடவடிக்கைகள் எடுக் கப்படவேண்டும் என்று இலங்கை ஐ.நா. செயலாளர் டிரோன பெர் னாண்டோ கோபிஅனானுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் வலியுறுத்தியுள்ளது.

வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ எழுதிய கடிதத்தில் ,ஈராக்கில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றங்கள் உலகில் பல ஆழமான பிளவுகளுக்கு இடமளிப்பவையாயி ருக்கின்றன.

இவற்றைக்குணப்படுத்துவதில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப் படாத பட்சத்தில் சர்வதேச நிலைப் பாடு அரசுகளுக்கிடையிலான உறவு கள் என்பவற்றில் பாரதூரமான பின் விளைவுகள் ஏற்படலாம்.

அண்மையில் ஈராக்கில் இடம் பெற்ற போரின் தாக்கம் ஐ.நா. வின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பினும் எதிர்காலத் தில் எல்லாநாடுகளும் ஒருமித்து சர்வதேச உறவுகளை எவ்வாறு பேண வேண்டும் என்பதிலேயே நாம் கவனத்தை ஈடுபடுத்தவேண்டும்.

அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்வதிலும் முன்னிருக்கும் பிரச் சினைக்குரிய விவகாரங்களை கையா ளுவதற்கு வேண்டிய பலத்தை பேணுவதிலும் உறுதியாயிருத்தல் வேண்டும்.

ஈராக்கில் மனிதாபிமானப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களை ஒருமுகப்படுத்தி அங்கு புனர்வாழ்வு ,புனர்நிர்மாணப் பணிகளைக்கையாளு வதற்கு தாங்கள் எடுத்துவரும் முயற் சிகளுக்கு நாம் எமது ஆதரவை வழங்குவோம்.

ஈராக்கின் எண்ணெய்க்கு பதிலீ டாக பொருட்களை அனுப்பிவைக் கும் திட்டத்தில் வேண்டிய மாற்றங் கள் செய்யப்பட்டமை பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## இராசி பலன்

15042003

(சித்திரை 2 ,செவ்வாய்)

திரயோதசி மு.ப 6.32 வரை
சதுர்த்தசி பி.இ 3 .09 வரை
உத்தரம் ந.ப 11.52 வரை
இராகுகாலம் 3.4 -4.34
சுபநேரம் 10.34-12.4

அமிர்த சித்தம்

**மேடம்**
காரிய சாதனை, சத்துருஜெயம் தேக ஆரோக்கியம், மனமகிழ்ச்சி.

**இடபம்**
சொத்துப்பிணக்கு, பூர்வ புண்ணியம்,

சதீஸ் நம்பியாரின்

# இரண்டாவது அறிக்கை

25 ஆம் திகதி சமர்ப்பிப்பு

உடனே ஒருநூறு ரூபாவை எடுத்து அவருக்கு அன்பளிப்பாக கொடுத்தார். அதன் பின்னர் அந்தப் போட்டிகள் முடிந்த பிறகு மன்னரும் நண்பரும் அரண்மனைக்கு திரும்பினார்கள்.

அரண்மனைக்கு வந்ததும் ‘ மன்னர் கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டீர்களே ’ என்றார் நண்பர் . என்ன வாக்குறுதி? என்று ஆச்சரியத்தோடு கேட்டார் மன்னர். ‘ ஒரு ரூபாய் தருவதாகச் சொன்னீர்களே ! என்றார். ’ அதுதான் நூறு ரூபா கொடுத்தேனே ! என்றார் மன்னர். இப்பொழுது அந்த நண்பர் ராஜாவைப் பார்த்து கொடுப்பதாக வாக்களிக்காத நூறு ரூபா கொடுப்பதாக வாக்களித்த ஒரு ரூபாவுக்கு ஈடாகாது. மன்னராக இருக்கிறவர் சொன்ன சொல்லை காப்பாற்றவேண்டும். அது தான் முறை என்றார். மன்னராக இருப்பவர் எப்படி இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா? மன்னரிடம் வேலை பார்க்கிறவர்களும் மக்களை கஷ்டப்படுத்தாதவர்களாக இருக்கவேண்டும்.

ஒரு அரண்மனையில் விருந்து நடந்து கொண்டிருந்தது. அந்த ஊர் வழக்கப்படி ஒரு எலுமிச்சம் பழத்துண்டை எடுத்து எல்லாரும் அவரவர் உணவிலே பிழிந்து கொண்டார்கள் . அடுத்தபடியாக ஒருவர் எடுத்தார். பிழிந்தார் சாறு வரவில்லை உடனே அங்கே இருந்த ஒரு பெரிய பயில்வான் வந்து அதைப்பிழிந்தார் அதிலேயே ஒரு சொட்டுத் தான் வந்தது. சக்கையாய் போய் விட்டது. அதன் பின் கடைசியாக இருந்த ஒருவர் அதை எடுத்தார். அவர் பார்ப்பதற்கு நோஞ்சான் மாதிரி... எலும்பும் தோலுமாக இருந்தார். இருந்தாலும்அவர் அந்த சக்கையை எடுத்துப்பிழிகிறார். ஏகபட்ட சாறு வந்து விட்டது. எல்லாருக்கும் ஆச்சரியம். கசக்கிப்பிழிவதிலே இவ்வளவு கெட்டிக்காரராக இருக்கிறாரே இவர் யார் என்று விசாரித்தார்மன்னர். ‘ இவர் தான் நமது ஊர் ஜனங்களிடம் வரிவசூல் பண்ணுகிறவர்’. என்றார்களாம் .

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

**இடபம்**
சொத்துப்பிணக்கு,பூர்வ புண்ணியம், எடுத்த கருமங்கள் தாமதமாகும்,வியாபார நன்மை.

**மிதுனம்**
மனச்சஞ்சலம் ,பெரியோரால் மதிக்கப்படல்,முயற்சி தாமதம் ,வாக்கு சாதுரியம்.

**கடகம்**
நினைத்த காரியம் கைகூடும்,மனமகிழ்ச்சி, குடும்ப சுகம், தர்மம்.

**சிங்கம்**
செல்வாக்குக்குறைவு, எண்ணங்கள் தாமதமாகும், பிரயாணகஷ்டம் ,அதிக செலவு.

**கன்னி**
பெரியோர் மதிப்பு,நல்ல முயற்சி,தெய்வ சிந்தை,விருந்துபசாரம்.

**துலாம்**
உறவினர் சந்திப்பு,எடுத்தகாரியம்தாமதமாகும்,சுபசெலவு , பயணம்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி,காரியம்கைகூடும், பொருள் சேர்க்கை விருந்துபசாரம்.

**தனுசு**
அதிகாரம் ,உற்சாகம் ,செய் தொழில் விருத்தி, தூரதேசச்செய்தி.

**மகரம்**
நண்பர்கள் உதவி ,வீண் பயணம், எண்ணங்கள் தமதமாகும், குடும்பசுகம்.

**கும்பம்**
வாகன பயம், தெய்வ சிந்தை, காரிய தாமதம்,எதிரிகள் தொல்லை.

**மீனம்**
பிறரால் மதிக்கப்படுதல் ,முயற்சி கைகூடும், திடீர் நன்மை,மனமகிழ்ச்சி

(பழையநேரப்படி கணிப்பிட்டது)

**வளவன்.**

# 25ஆம் திகதி சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துதல் தொடர்பாக முன்னாள் இந்திய இராணுவ அதிகாரிலெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் இரண்டாவது அறிக்கை இம்மாதம் 25ஆம்திகதி இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

25ஆம்திகதி இலங்கை வரவுள்ள லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியார் அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பானதனதுஇரண்டாவது அறிக்கையை அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் நேரடியாக சமர்ப்பிக்கவுள்ளார்.

சதீஸ் நம்பியாரின் இந்த அறிக்கை குறித்துஇம்மாதம் 29ஆம்திகதி நடைபெறவுள்ள7வது சுற்றுப்பேச்சுவார்த்தையின்போது ஆராயப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக சதீஸ் நம்பியார் சில மாதங்கள் முன் சமர்ப்பித்திருந்த முதலாவது அறிக்கையை விடுதலைப் புலிகள் நிராகரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

# உலக நாடுகளின் தலைவர்களை அமைச்சர் மிலிந்த சந்தித்தார்

(கொழும்பு)

தற்போது அமெரிக்காவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள விஞ்ஞான தொழில்நுட்ப அமைச் சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவினர் சர்வதேச நாடுகளில் தலைவர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இச்சந்திப்பின் போது இலங்கையில் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் சர்வதேச சமூகம் அதற்கு வழங்கி வரும் ஆதரவுகள் மற்றும்உதவிகள் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இந்தியா, சீனா, கனடா ,நெதர்லாந்து உட்பட பல்வேமி நாடுகளின் தலைவர்களையும் இக்குழுவினர் சந்தித்துள்ளனர்.

இலங்கைக்கு தாம் வழங்கி வரும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து வழங்குவதாக சர்வதேச நாடுகளின் தலைவர்கள் உறுதியளித்ததாக பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை,அமைச்சர் மிலிந்த, ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூஸி அகாஷி, உலக வங்கித்தலைவர் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (க-8)

காணாதான் காட்டுவான் தான் காணான் காணாதான்
கண்டானாம் தான் கண்ட வாறு.

-குறள்-

# வலம்புரி

## கலாசார சீரழிவு

யாழ்ப்பாணத்தில் கலாசாரப் பிறழ்வுகள் அதிகரித்துவிட்டது என்ற கூக்குரல் தறபோது பரவலாக எழுப்பப்படுகிறது.இருபது வருடகால யுத்தத்தின் வெளிப்பாடாக கலாசார சீரழிவுகள் விளைந்திருக்கலாம் என்பது ஊகம்.இதற்கு மேலாக சமகாலத் திரைப் படங்களின் தாக்கம், ஆபாசப் படங்கள் போன்றவையும் கலாசாரச் சீரழிவில் கணிசமான பங்கை ஆற்றுகின்றன.

அவ்வகையிலேயே கலாசார சீரழிவு என்ற கோஷம் இப்போது எங்கும் ஒலிக்கின்றது.இதில் விசித்திரம் என்னவெனில் கலாசார சீரழிவு என்ற கோஷம் எழுப்புபவர்களின் பின்னணியிலும் கலாசாரச் சீரழிவுகள் நிறைய இருப்பதாகும்.

கலாசாரச் சீரழிவுகள் என்ற பெயரில் சமயங்களைக் கீழ்த்தரமாககும் நடவடிக்கைகளும் சொந்தப் பழிவாங்கல்களும் இப்போது ஆரம்பித்துவிட்டன.

மதமாற்றங்களின் உச்சக் கட்டமே கலாசாரச் சீரழிவு என்ற பேரில் சில முன்னோடி நடவடிக்கைகள் முடுக்கி விடபட்டுள்ளன.

உலகுக்கு நீதியை உணர்த்திய சைவத்திற்கு கெடுதி நேர்ந்துள்ளது.தனிப்பட்ட பழிவாங்கல்களும்,மதமாற்றத்தின் பின்னணிகளும் ஆழ ஊடுருவி இருப்பதை நாம் உணர முடியும். அதன் விளைவு சிவ பூமிஎன்று போற்றப் பட்ட ஈழத்தில் சைவ சமயத்தவர்கள் தலை குனிந்து நிற்கிறார்கள். புனித வத்திக்கானுக்கு ஒப்பானது இலங்கை அந்த இலங்கைத் திருநாட்டில் சைவ சமயத்தில் தான் கலாசார சீரழிவு பாலியல் வன்முறை இதனை அனுமதிக்க முடியாது என்பது போல் நடவடிக்கைகள் துரிதமாக நடக்கின்றன,

இன்று உலக் அரங்கில் இயங்க முடியாத ஊடகங்களுக்கு கை(த்)தடி கொடுத்தது போல் எங்கும் அதுபற்றியே ஒரே பேச்சு.

என்ன செய்வது அரைப் பனி கோலத்தில் சில உள வியல கருத்துக்கள்,அதற்கென ஓர் அமைப்பு,அவர்களால்

---

## இரக்கமற்ற சர்வாதிகாரி சதாம்

# நேற்று வரை போற்றிப் புகழ்ந்தவர்கள் இன்று வெறுப்புடன் தூற்றுகிறார்கள்

முக்காடிட்டு நின்ற ஒரு ஈராக்கியப் பெண்மணி ஆகாயத்தைப் பார்த்தபடி ஏதோ உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பின்வருமாறு கூறிக்கொண்டிருந்தார்.

"அவர் எமது தலைவர், நாங்கள் நேசிக்கும் தலைவர், எங்களின் அறிவு முதிர்ந்த தலைவர், எங்கள் எல்லோருக்கும் அவரே தந்தை" முகத்தைக் கைகளால் பொத்தியபடி அப்பெண் மேலும் கூறினாள், "அவர் வெற்றிக்கு மேல் வெற்றி பெறுகிறார். எங்கள் எல்லோருக்காவும் கவலை கொள்கிறார். எங்களுக்கு எல்லாமே அவர் தான்" என்று,

கடந்த வாரம் ஈராக்கிய தொலைக் காட்சி நிலையம் கூட்டமைப்புப் படைகளின் தாக்குதலுக்குள்ளாகி மௌனமாக்கப்படும் வரை இந்த விதமான பெருந்தலைவர், ஈராக்கின் அதிபர், ஈராக்கிய படைகளின் தளபதி, ஈராக்கிய மக்களின் தந்தை, நபிகள் நாயகத்தின் நேரடி வழித் தோன்றல் போன்ற புகழைப் பாடுதல் இரவுக்கிரவு தொடர்ந்து கொண்டேயிருந்தது.

இந்தவிதமான நிலைமை வெகு காலமாக இருந்துவந்தது. ஏனென்றால் பெரும்பாலான ஈராக்கியர்களுக்கு சதாமின் முகமும் அவரது குரலும் தமது வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டிருந்தது. சூரியக் குடும்பக் கோள்களைப் போல இதுவும் நிரந்தரமானது என அவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் சதாமின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு விட்டது என்ற தகவல் வெளிவந்த நேரத்தில் பக்தாத் நகர வீதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் அதிர்ச்சியளிப்பதாக இருந்தன.

ஒரு சர்வாதிகாரியின் வீழ்ச்சியை பக்தாத் நகரில் 50 லட்சம் மக்களும் மகிழ்ச்சி, அவநம்பிக்கை, ஆத்திரம், விரக்தி போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் நடந்து கொண்டார்கள்.

இப்போது உள்ள ஈராக்கிய மக்களில் அரைவாசிப்பேரும் 20 வயதுக்குக் குறைந்த வயதினர். 24 ஆண்டுகளுக்கு முன் பூரண அதிகாரிகளோடு சதாம் பதவிக்கு வந்தபோது இவர்கள் பிறந்தும் கூட இருக்கவில்லை.

1968இல் பாக். கட்சியின் புரட்சியை அடுத்து அதிகாரத்தைக் கைப்பற்றிய சதாம் ஒரு பரம்பரையின் வாழ்வையே நசுக்கி சிறைப்பிடித்து விட்டாரென்று கருதப்படுகின்றது. சதாமின் வீழ்ச்சி அனேகருக்கு மகிழ்ச்சியைத் தந்துள்ளது. அவர்கள் அவரை விரும்பவில்லை.

தனக்கு எதிரானவர் என்று கருதிய ஒரு கௌரவ இராணுவ ஜெனரலை அவர் கொலை செய்ததன் பின்னர் அந்த ஜெனரலின் உறசவினர்களிடம் இவ்வாறு கூறினார்.

"உங்களால் என்னைப் பழிவாங்க முடியுமென்று நினையாதீர்கள். அப்படி ஒரு சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைத்து நீங்கள் என்னிடம் வருவீரகளானால் நீங்கள் என் அருகில் வரும் போது என் உடம்பில் ஒரு கொஞ்ச இறைச்சி கூட மிஞ்சியிருக்காது"

நவகாலத்தில் சதாம் மிகக் கொடூரமான கொலைகார ஆட்சியை நடத்தியுள்ளார். இவ்வாறு பயங்கரமான ஆட்சியாளராக அவர் இருந்திராவிட்டால், ஈராக்கியர்கள் அவரின் கால் வேறு கைவேறாக கிழித்தெறிந்திருப்பார்கள்.

சதாம் சன்னிமுஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர். 80 வீதமானவர்கள் ஷியா முஸ்லிம்கள் அல்லது குர்துக்கள். முதல் அவர் ஒரு பழங்குடி இனத்தவர். அவரது இனத்தவர்களையும் அதனோடு சேர்ந்தவர்களையும் கணக்கிட்டால் ஒரு சில ஆயிரக் கணக்கில் தான் இருப்பார்கள்.

23 மில்லியன் மக்களைக் கொண்ட நாட்டில் தனது இனப்பிரிவினை அதிகார நிலைக்கு உயர்த்தி வைப்பது அவரது நோக்கமாக இருந்துள்ளது. அரசியலில் அவருக்கிருந்த சிறப்பியல்புகளினால் இந்த நோக்கத்தைப் பெரும்பாலும் நிறைவேற்றியிருந்தார்.

### டேவிட் பிளேயர் என்பவர் எழுதியுள்ள கட்டுரையில் இருந்து தொகுக்கப்பெற்றது

அவர் பதவியில் இருந்த காலத்தில "சதாம் ஹுசைன்" என்று அவரது பெயரைக் கூறக்கூட மக்கள் பயந்தார்கள். இன்று அவரைப் பெயர் சொல்லி அழைக்கும் நிலை தோன்றியிருப்பது அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் ஒரு சுதந்திரமாகும்.

அவரது சொந்த ஊரான டிக்கிரிட்டிலும் அதன் அண்டை நகரங்களிலும் நிச்சயம் கவலை நிலை கொண்டிருக்கும். அத்துடன் சதாமின் எதிரிகள் பழிதீர்த்துக் கொள்ள முயல்வார்கள் என்ற அச்சமும் ஏற்படவாய்ப்புண்டு. சுமார் ஒரு மில்லியன் ஷியா முஸ்லிம்களும் சதாமுக்கு பாரம்பரியமாகவே எதிர்க் கருத்துக் கொண்ட மேலும் பல மில்லியன் மக்கள் சதாமின் வீழ்ச்சி குறித்து தெருக்களில் கொண்டாட்டங்கள் நடத்துகிறார்கள்.

தெற்கில் ஷியாக்களை அதிகமாகக் கொண்ட பகுதிகளில் பெரு மகிழ்ச்சி நிலவுவதில் ஆச்சரியமில்லை. வடக்கில் குர்துக்கள் வாழும் பகுதிகளில் இன்னும் அதிக மகிழ்ச்சி நிலவ காரணமுண்டு. சதாமின் கெடுபிடிக்களால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இந்த மக்கள்.

சதாமின் படங்களும் சிலைகளும் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் வைக்கப் பட்டிருந்தன. மக்களை அவர் எந்நேரமும் கண்காணித்துக் கொண்டிருக்கிறார் என்பதைக் காட்டுவதற்காக இப்படிச் செய்யப்பட்டிருக்கலாம் ஆனால் சதாமைப் பொது இடங்களில் உயிருடன் மக்கள் காண்பதே அரிதாகவிருந்தது.

80 களின் மத்தியில் ஈராக்குடனான போரின் பின்னர் சதாம் பகிரங்கமாகவே வெளிவருவதை நிறுத்திக் கொண்டார்.2000க்குப் பின்னர் முற்றாகவே அவர் வெளிவருவதில்லை. சதாமின் 65 வயது பிறந்தநாள் கடந்த ஏப்ரலில் கொண்டாடப்பட்ட போது தமது கட்சி நிகழ்ச்சிகளுக்குக் கூட அவர் சமூகந்தரவில்லை. அவரது டாம்பீகமான மாளிகை களில் இருந்தும் கூட அவர் மறைவான இடங்களுக்குச் செல்லத் தொடங்கியிருந்தார் என்று கருதப்பட்டது.

சதாமின் இடத்தில் 3 நபர்கள் அவரைப் போலவே நடித்து வந்திருப்பதாகக் கருதப்படுகின்றது. அண்மையில் தொலைக்காட்சியில் அவர் தோன்றியதெல்லாம் இந்த போலி நபர்கள் மூலமாகத் தான் இருக்க வேண்டுமென்று கருதப்படுகின்றது.

3 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த வாரம் சதாம் பக்தாத் வீதிகளில் நடந்து மக்களைக் கண்டு சிரித்து குழந்தைகளைக் கொஞ்சி மகிழ்ந்தார் என்றால் அதிசயம் தான். மக்கள் ஏமாறினார்களா? ஏமாற்றப்பட்டார்களா? உண்மையில் பக்தாத் வீதிகளில் நடந்து சென்றவர் சதாமின் இன்னொரு போலி உருவங்களிற்குரியவராகவும் இருக்கலாம். இந்த மர்மங்கள் இனித்தான் சிறிது சிறிதாக வெளிவரும். (பி)

---

## இலங்கைக்கு உதவி வழங்கும்

# முன்னோடிக் கூட்டம் கொழும்பில் நடக்கும்

(கொழும்பு)

வாஷிங்டனில் நேற்று ஆரம்பமான ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிற்கான முன்னோடிக் கூட்டம் போன்று அடுத்த மாதம் கொழும்பில் மற்றொரு முன்னோடிக் கூட்டம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

அமெரிக்க இராஜாங்க திணைக்கள லொய் ஹெண்டர்கன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமான இக்கூட்டத்திற்கு அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் ஆர்மிரேஜ் தலைமை தாங்குவதும் ஜப்பானில் எதிர்வரும் ஜூன் மாதம் 9, 10ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் இலங்கைக்கு 900 கோடி ரூபா வெளிநாட்டு உதவி கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

# புத்தளத்தில் மீண்டும்

---

# இலங்கைப் பிரதமரின் சீன விஜயம் ரத்து

(கொழும்பு)

சீனாவில் சார்ஸ் நோய் பரவி வருவதால் அந்நாட்டுக்குச் செல்லும் திட்டத்தை இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஒத்திவைத்துள்ளார்.

வரும் 23ஆம் திகதியிலிருந்து ஒரு வார காலம் சீனாவில் சுற்றுப் சிங்களப் பத்திரிகை 'சிலுமினா' இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

சீனாவுக்குச் சொந்தமான மீன்பிடிக் கப்பலை விடுதலைப் புலிகள் கடந்த மாதம் தாக்கி மூழ்கடித்ததாகக் கூறப்படுகின்றது. இதற்கு இழப்பீடு தருமாறு சீனா கேட்டுள்ளது. சீனாவிடமிருந்து தான் ஏராளமான ஆயுதங்

வியல கருத்துக்கள்,அதற்கென ஓர் அமைப்பு,அவர்களால் கொடுக்கும் முறைப்பாடுகள் சமூக ஒழுங்கமைப்புத் தெரியாத வித்தைகள் இவற்றினால் இன்று சைவ சமயமே வெந்த புண்ணாகி உள்ளது.

ஆ,இறைவா, ஏழைகளை படைத்து விடாதே அப்படிப படைத்தாலும் சிறுவயதில் பெற்றவர்களை பறித்து விடாதே

அதுதான் உன்செயல என்றால் மானம் போவது தவிர்க்க முடியாதது தான் ஆனாலும் உனது பார்வை உனது அளவு கோல்,உனது தீர்ப்பு எல்லாம் ஏழை, பணக்காரன் படித்தவன்,படியாதவன் என்ற பேதமையற்றது என்பதால் ஓரளவுக்கு நிம்மதியே

எதுவாயினும் நிறுவனமயப்படுத்தப்படாத சைவ சமயத்தை சாடுவதற்கும்,அதனை தூற்றுவதற்கும் வசதிகள் அதிகமுண்டு.

எத்தனைதான் தோல்விகள துனபங்கள்,அவமானங்கள் ஏற்படுத்தப்படுகின்ற போதிலும் சைவ சமயம் தனது ஆழமான கொள்கைகளில் நின்றும் விலகப் போவதில்லை என்பது காலத்தால் உணர்த்தப்படும் உண்மையாகும்

## நடமாடும் சேவை

(கொழும்பு)

புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்ற அமைப்பினால் புத்தளத்தில் நடாத்தப்படவுள்ள நடமாடும் சேவை குறித்த திகதி பின்னர் அறிவிக்கப்படும் என சம்பந்தப்பட்ட அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி புத்தளம் அன்ரூஸ் மகாவித்தியாலயத்தில் புனர்வாழ்வு மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா தலைமையில் நடமாடும் சேவை ஆரம்பிக்க இருந்த வேளை சம்பவ இடத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக இச்சேவை இடைநிறுத்தப்பட்டது தெரிந்ததே.

வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த நடமாடும் சேவையினை தான் நடத்த இருந்ததாக புனர்வாழ்வு அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (உ)

பயணம் செய்ய இலங்கைப் பிரதமர் திட்டமிட்டிருந்தார். சீனாவில் சார்ஸ் நோய் பரவிவருவதால் சீனப் பயணத்தை கால வரையறையின்றி அவர் ஒத்திவைத்துள்ளார். அரசுக்குச் சொந்தமான களை இலங்கை அரசு வாங்கிவருகிறது. சீனாவில் சார்ஸ் எனப்படும் மூச்சுத்திணறல் நோய்க்கு இதுவரை 60 பேர் இறந்துவிட்டனர். 1336 பேரிற்கு இந்நோய் தொற்றியுள்ளது. (பி)



## தினசரி தியானம்

### கடவுள் துணை

உண்மையாக மனதாரக் கடவுளைத் தேடுகிறீர்கள் எனில், கடவுள் பற்றி உணரத் தேவையிருப்பின் அதற்கான வழங்கல் உடனடியாக வரும். பொய்யான வாழ்க்கையைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டாம். அச்சமற்றிருங்கள். உணர்ச்சியயப்படாத் தன்மையை புகலிடமாகக் கொள்ளுங்கள். எல்லா அச்சங்களும் மறைந்தொழியும். இறைவனது கமல பாதங்களைப் பற்றிக் கொள்ளுங்கள். எல்லாம் வல்லவரான அவர் உங்களது செய்கைகளுக்கு துணையாக இருப்பார்.

**சுவாமி சிவானந்தர்**

## தவக்கால நற்சிந்தனை



"நான் உமது மீட்பை; புகழ்ந்து பாடுவேன"

தோல்வியே ஒரு மனிதனது உண்மை முகத்தைக் காட்டும் வெற்றியல்ல. இயேசு உள்ளக்கலக்கத்துடன் ஒரு சீடன் காட்டிக் கொடுப்பான் என்கிறார்.. இதேவேளையில் தலைமைச் சீடர் மும்முறை தன்னை மறுதலிப்பான் என்கிறார். இரு சீடர்களின் தோல்வியும் மாபெரும் சறுக்கல்களே. யூதாஸ் காட்டிக் கொடுத்தான். பேதுருவோ மறுதலித்தான். யூதாஸ் 30 வெள்ளிக் காசுக்காகத் தன் தலைவரை விற்றான். பேதுருவோ தன் தலை போய்விடக் கூடாது என்பதற்காக தன் தலைவரை விட்டுக் கொடுத்தார். இருவரின் தோல்வியும் வெட்கத்திற்கும் வேதனைக்கும் உரியவையே. இயேசு அடைந்த தண்டனைத் தீர்ப்பைக் கண்டு யூதாஸ் மனம் வருந்தினான். வெள்ளிக் காசுகளைத் திருப்பிக் கொடுத்தான். தன்னையே அழித்துக் கொள்வார். பேதுருவோமனம் வெதும்பி அழுதார். இயேசுவிடம் திரும்பி வந்தார். சீடர்களின் வழியில் தோல்விகள் நிகழ்வது இயல்பு. பேதுரு திரும்பி வந்தார். தலைவனானார். யூதாசோ திரும்பவேயில்லை. நம் கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தின் தோல்விகள் நம்மைக் கிறிஸ்துவிடம் இணைக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவை இழக்கவோ நம்மை இழக்கவோ காரணமாகிவிடக் கூடாது.

**காவலன்**

## ஈ.பி.டி.பி.அலுவலகம் மீது கிரனைட் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலை உட்துறை வீதியில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் மீது நேற்றிரவு 7.50 மணியளவில், கிரனைட் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் சிலரே கிரனைட் தாக்குதலை மேற் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. (த)

## மிதிவெடியால் மாணவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

நிலத்தில் கிடந்த மிதிவெடியை எடுத்து மதில் மீது எறிந்த போது அது வெடித்துச் சிதறியதில் பாட சாலை மாணவர் ஒருவர் பரிதாப கரமாக உயிரிழந்தார்.நேற்றுக் காலை 6.45மணியளவில் இடம் பெற்ற இச் துயர சம்பவத்தில் மீசாலை மேற்கைச் சேர்ந்த மாண வன் ஆறுமுகராசா சுகந்தன் (வயது 16) என்பவரே பரிதாப கரமாக உயிரிழந்தவராவார்.மிதி வெடி வெடித்ததில் படுகாய மடைந்த மாணவன் உடனடியாக யாழ்.போதனா வைத்தியா சாலையில் அனுமதிக்கபட்டு சிறிது நேரத்துலேயே உயிரிழந்தான் (த-6)

---

### தமிழீழ...

வேற்று மொழியைச் சார்ந்த பாடக ர்கள் தமது மொழியில் எழுதி தமிழ் பாடல்களைக் பாடுகினறனர் இதுவே தமிழ் உச்சரிப்பு,அதன் சிறப்பு, தனித் தன்மை என்பன கெடக் காரணம். என்று நான் துணிந்து கூறுவேன்இந்த நிலை யில் எந்த மொழிக்கலப்புமற்ற தெள்ளிய தமிழில் எழுதப்படும் தமி ழீழ எழுச்சிப் பாடல்கள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.

இதன் காரணமாவே தமிழீழ எழுச்சிப் பாடல்களை பாடுவதில் நான் ஆர்வம் காட்டி வருகி ன்றேன்.. (உ-4)

### இலங்கைக்கு...

ப்பிக்கப்படவுள்ளது.

அமெரிக்கத் தலைநகர் வாஷி ங்டனில் இம் மாநாடு நடை பெற்று வரும் இவ்வேளையில் அமெரிக்கா வில் சர்வதேச நாணய நிதியத்தின் பல்வேறு வகையான கூட்டங்கள் இங்கு நடை பெற்றுவருவதால். இக் கூட்டங்களில் கலந்து கொள் வதற்கென இலங்கைக்கு உதவி வழங்கவிருக்கின்ற பல்வேறு உலக நாடுகளின் நிதியமைச்சர்கள் மற் றும் பிரதிநிதிகள் அங்கு சமுகம் அளிக்கவுள்ளனர்.

இந் நிலையில் அமெரிக்கா இந்த முன்னோடி மாநாட்டை கூட்டியிருப் பதனால்,எதிர்பார்ப்பதிலும் பார்க்க கூடுதலான நிதியுதவி இலங்கைகது கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக இராஜதந்திர அவதானி கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பிற மாகாணங்களில் நிலவும் வறுமை ஒழிப்பு,அடிப்படை வசதிகளை ஏற்ப படுத்தவும் இலங்கை அரசு தயா தித்துள்ள திட்டங்கள் இம் மாநாட்டில் விரிவாக ஆராயப்ப ட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை,அமைச்சர் மிலிந்த மொறகொட மாநாட்டில் கலந்து கொண்டுள்ள இந்தியா,சீனா,கனடா நெதர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் தனித் தனியா கலந்துரையாடியுள்ளார்.

வாஷிங்டன் கூட்டம் தொடர்ந்து 2வது நாளாக இன்றும் நடை பெற வுள்ளதாக அமெரிக்காவின் பிரதி வெளி விவகார அமைச்சர் றிச்சாட் ஆமிடேஜ் தெரிவித் துள்ளார். (வ)

### ஆரையம்பதி..

என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் ஜெகதீபன்(வயது 30)என்பவரும் அவ்விடத்திலேயே மரணமானார்.

மேற்படித்துப்பாக்கிப் பிரயோகத் தில் வரதன் குழு உறுப்பினர்களான சவரிமுத்து ரகுவதனன் (வயது19) தனபாக்கியம் வாசுதேவா (வயது 21)க்ந்தையா சந்திரமோகன்,(வயது22) சுப்பிரமணியம் யோகேஸ்வரன் (வயது 26) ஆகியோரும்,

கிரனைட் வீச்சு சம்பவத்தில் சீனித்தம்பி யோகேஸ்வரி (வயது50) நாகமணி ஜெகதீஸ்வரி(வயது26) நாகமணி நிரஞ்சனாதேவி(வயது24) கார்த்திகேசு அனோஜ்(வயது 18) ஆகியோரும் காயமடைந்தனர்

மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் காத்தான்குடிப் பொலிஸார் குறித்த வீட்டில் இருந்து மேற் கொள்ளப்பட்ட தாக்குதலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் குறித்த வீட்டில் இருந்த இளைஞர் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் அவர் தற்போது அவ்வமைப்பில் இருந்து விலகி உள்ளார் என்றும் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை மேற்படித் தாக்கு தல் சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பேச்சாளர் கிரிசன் முற்றாக மறுத்துள்ளதுடன்,

குறித்த வீட்டில்தனது ஆதரவா ளர்களோஅல்லது விடுதலைப் புலி உறுப்பினரோ எவரும் இல்லை என உறுதிபடத் தெரிவித்துள்ளார். (த-10,8)

---

### அதிகாரப்..

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும் முன் னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் சகல அம்சங்களிலும் திருப்திகரமாக அமைந்துள்ளன எனக் கூறிவிட முடியாது.

இடைக்கால நிர்வாகத் திட் டத்தை எந்த ஒருநாடும் இதுவரை முழுமையாக நடை முறைப்படுத்த வில்லை.ஆனால் தென் ஆபிரிக்கா வகைப் பொறுத்தமட்டில் நானூறு வருடங்களுக்கு இடைக்கால நிர்வாக ஆட்சி நீடித்தது.

வட அயர்லாந்தில் இனப்பிரச்சி னைக்குத் தீர்வு காணவென சகல விதமான பிரயத்தனங்களும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந் நாட்டின் சமாதான நடவடிக்கைகள் தோல்வியையே சந்தித்தன.

ஆயினும் மிகக் குறுகிய காலத் தில் இலங்கையின் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேசமயம்சமாதான நடவடி க்கைகளில் முனைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் உலக











## பிற்போடப்பட்டுள்ளது

### காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்கம்

நாளை (16.04.2003 புதன்கிழமை)திறக்கப்பட விருந்த காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்கம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

உதவி அரசாங்க அதிபர்
காரைநகர்.
(C/5995)


## கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 11 . 9 . 1978

### செல்வன் தர்மலிங்கம் பரம்சோதி

ஆண்டவன் மடியில் 12 . 4 . 2003

எமது சக உத்தியோகத்தரான காரைநகர் மத்தி சமுர்த்தி அபிவிருத்திஉத்தியோகத்தர் தர்மலிங்கம் தனலகசுமி அவர்களின் அன்புச் சகோதரன் தர்மலிங்கம் பரம்சோதி அவர்கள் 12.04..2003 அன்று அகால மரணமானதையிட்டு நாம் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

காரைநகர்
உதவி அரசாங்க
அதிபர் பணிமனை
காரைநகர்

உதவி அரசாங்க அதிபரும் அலுவலக எனைய ஊழியர்களும்

(C/5994)

விடுதலைப் புலிகள் உலக நாடுகளின் சக்திகளுக்கும் மதிப் பளித்து நடந்து கொள்ள வேண் டும் எனக் கேட்டுக் கொண்டார்.

(உ-8)



இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர்களிடையே புத்தாண்டை ஒட்டி நடத்திய பரிசுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசு வழங்கு வதைப் படங்களில் காணலாம். படம்:பவன்.


ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்
வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

- ⁂ அரசியல் கட்டுரைகள்
- ⁂ அறிவியல் ஆக்கங்கள்
- ⁂ கவிதைக் கலசம்
- ⁂ வியாசரின் பதில்கள்
- ⁂ மகளிர் உலகம்
- ⁂ சிறுவர் அரங்கம்

இன்னும்
தமிழுலகின் தலைசிறந்த எழுத்தாளர்
செங்கை ஆழியான் எழுதும்
ஈழராஜா எல்லாளன்
தொடர்கதை
வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்



# உடன் தேவை

- கணனி பக்க அமைப்பாளர்கள் (ஆண், பெண் இருபாலாரும்)
- பத்திரிகை விநியோகஸ்தர்கள் (சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள்)

சுயமாகத் தயாரித்த சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.